உ
சிவமயம்

# சைவசித்தாந்தம்

*பல்லா ராயிருணரும் பான்மையென மேலொருவ*
*னில்லாதா னெங்க ளிறை.*

## சைவசித்தாந்த ஆய்வு நிறுவன
## இரு திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| மலர் - 01 | *விய வருஷம் சித்திரைத் திங்கள் 28 ஆம் நாள் வியாழக்கிழமை (11.06.2006)* | இதழ் - 02 |



வெளியீடு:
சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.
2006

உ
சிவமயம்

# - சைவசித்தாந்தம் -

## சைவசித்தாந்த ஆய்வு நிறுவன இரு திங்கள் வெளியீடு


| மலர் - 01 | விய வருஷம் சித்திரை திங்கள் 28 ஆம் நாள் வியாழக்கிழமை (11.06.2006) | இதழ் - 02 |
|---|---|---|


சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்ர மார்க்கம்
தாசமார்க்கம் மென்றுஞ்சங் கரனையடையும்
நன்மார்க்கம் நாலவைதாம் ஞான யோகம்
நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்பிய
சாரூப்பிய சாயுச்சிய மென்றுசதுர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தால் எய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கும் முத்தித மென்பர்.


வெளியீடு:
**சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்,**
**ஏழாலை மேற்கு, சுன்னாகம்,**
**யாழ்ப்பாணம்.**

# சைவசமயத்தின் பிரமாண நூல்கள்

சு. சிவபாதசுந்தரம்

ஈரைந்து பத்து என்பது ஓர் உண்மை. இது எக்காலத்திலும் உண்மையாயுள்ளது. ஆயிரம் வருடங்களுக்கு முன்னும் ஈரைந்து பத்தேயாம். ஈரைந்து பத்து ஆனது ஒரு குறித்த காலத்திலே அன்று. இப்படியே உண்மைகள் எவற்றுக்குந் தொடக்கமில்லை. ஆதலால் உண்மைகளெல்லாம் *அநாதி என்று சொல்லப்படும். சைவசமயக் கொள்கைகள் உண்மைகள். ஆதலாற் சைவசமயக் கொள்கைகள் அநாதி.

ஈரைந்து பத்து என்ற உண்மை விவேகமுள்ள மனிதர் யாவருக்கும் விளங்கும். இதை அறிந்தவர்கள் காலத்துக்குக் காலம் கணக்குப் புத்தகங்களிலே பெருக்கல் வாய்பாட்டிலே எழுதியிருக்கிறார்கள். உபாத்தியாயர்கள் இதைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதுபோல, கடவுள் அருளிய ஞானத்தைப் பெற்றவர்கள் சைவசமய உண்மையை உணருபவர்கள். அவர்கள் அந்த உண்மையைக் காலத்துக்குக் காலம் மற்றையோர் அறிவதற்காகச் சொல்லியிருக்கிறார்கள். கடவுளும் சைவ சமய உண்மையை நேரே உபதேசித்தருளினர். இப்படியாக ஞானிகளாலும் கடவுளாலும் அருளிச் செய்யப்பட்ட சைவசமய நூல்கள் பல. பலவாறாயிருந்தாலும் அவை சொல்லும் உண்மை ஒன்றேயாம்.

சைவசமய நூல்கள் வேதம், ஆகமம், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், மெய்கண்ட சாத்திரம் முதலியனவாம். இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னும் நான்கு வேதங்களும், காமிகம் முதலிய இருபத்தெட்டு * ஆகமங்களும் கடவுளால் அருளப்பட்

* அநாதி - அந் + ஆதி - தொடக்கமில்லாதது.

* காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், திச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் ஆகிய இருபத்தெட்டும் சைவாகமங்களாம்.

டவை. இவை வடமொழியில் உள்ளன; ஒவ்வொரு படைப்புக் காலத் தொடக்கத்திலும் பக்குவமுள்ள ஆன்மாக்களுக்குக் கடவுளால் உபதேசிக்கப்படுவன. படைப்புக்குத் தொடக்கமில்லாமையால், ஒவ்வொரு சிருட்டியிலும் உபதேசிக்கப்படுவனவாகிய வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் தொடக்கமில்லையாம்: தேவாரம் திருநாவுக்கரசு சுவாமிகளாலும், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் தமிழிலே பாடப்பட்டவை. திருவாசகம் மாணிக்கவாசகசுவாமிகளால் தமிழிலே பாடப்பட்டது. திருமந்திரம் திருமூலநாயனாரால் தமிழிலே பாடப்பட்டது. மெய்கண்ட சாத்திரம் பதினான்கும் தமிழிலே பாடப்பட்டவை. அவற்றின் பெயரும் செய்தவர்கள் பெயரும் வருமாறு:-

| நூல்கள் | செய்தவர் |
|---|---|
| 1. திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் |
| 2. திருக்களிற்றுப்படியார் | திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் |
| 3. சிவஞானபோதம் | மெய்கண்ட தேவநாயனார் |
| 4. சிவஞானசித்தியார் | அருணந்தி சிவாசாரியார் |
| 5. இருபாவிருபஃது | மேற்படி |
| 6. உண்மைவிளக்கம் | மனவாசகங்கடந்ததேவநாயனார் |
| 7. சிவப்பிரகாசம் | உமாபதி சிவாசாரியார் |
| 8. திருவருட்பயன் | மேற்படி |
| 9. வினாவெண்பா | மேற்படி |
| 10. போற்றிப்பஃறொடை | மேற்படி |
| 11. கொடிக்கவி | மேற்படி |
| 12. நெஞ்சுவிடுதூது | மேற்படி |
| 13. உண்மைநெறிவிளக்கம் | மேற்படி |
| 14. சங்கற்பநிராகரணம் | மேற்படி |

மேலே சொல்லப்பட்டவை ஞானநூல்கள் ஆகும். இவை சைவசமயத்துக்குப் பிரமாணமாயுள்ளவை. இவை தவிரப்

புராணங்கள் இதிகாசங்களென்று இரண்டு வகையான சைவநூல் களுண்டு. இவை பெரும்பாலும் பழைய சரித்திரங்களைச் சொல்லு வன. இவற்றுட் பல, குறைந்த நிலையிலுள்ளவர்களுக்கும் மிக்க நன்மை பயக்கக் கூடியவை.

புராணங்கள் கடவுளுடைய திருவருட் சிறப்பைச் சொல்லு வன; இவைகளைப் படித்தாற் சிவபத்தி வளரும். இவைகளிலே சமய உண்மைகளை விளக்கு கின்ற பகுதிகளுமுண்டு. இவ் வுண்மைகள் தனித்தனியே சொல் லப்பட்டால் வாசிக்கிறவர்கள் இலகுவாய் மறந்து விடுவார்கள். அவை புராணக் கதைகளிலே வரும்போது மனசிலே நன்றாகப் பதிகின்றன. உதாரணமாக, எவருக்காகவாயினும் பொய் சொல்லல் ஆகாது என்பது ஒரு சமய உண்மை. இந்த உண்மை தனியே சொல்லப்பட்டால் இதை மறப்பது இலகு வாயிருக்கும். இதை அமைத்திருக்கும் இனிய ஒரு கதை இருந்தால் அது நினைவிலிருக்கும். கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலி யன புராணங்களிற் சிறந்தன. இவற்றிற் சில பகுதிகளுக்கு வெளிப்படைப் பொருள் கொள்ள லாகாது. சைவ இதிகாசங்கள் அடியார்களுடைய சரித்திரங் களைச் சொல்லுவன.

**நன்றி**
**சைவபோதம்**
**இரண்டாம் புத்தகம்**

---

ஆபிறந்த நாள். மேலும் பிறக்கும்நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை.

பொறிஇன்றி ஒன்றும் புணராத புந்திக் (கு)
அறி (வு) என்ற பேர் நன் (று) அற.

---

# சைவசித்தாந்த வினாவிடை

## 2. கடவுள்

க. கணேசலிங்கம்

**1. கடவுள் என்று ஒரு பொருள் உண்டா? உண்டெனில் அதனை எவ்வாறு அறிவது?**

சைவசமயம் கடவுளை நம்புகிற சமயம். கடவுள் உண்டு என்பது அதன் கொள்கை. கடவுள் உண்மையைப் பல வழிகளில் அது அறிவுறுத்துகிறது. சைவ நூல்களும் அருளாளரின் வாக்கும் செயலும் கடவுள் உண்மையைக் காட்டுகின்றன. தர்க்கமுறையிலும் அறிவியல் சார்ந்ததாகவும் விளக்கங்கள் சைவத்தில் தரப்பட்டுள்ளன.

ஒருவனால் ஆக்கப்பட்ட ஒரு பொருள் ஒரு காலப் பகுதியில் நிலைத்து நின்று பின் அழிகிறது. தோன்றி, நின்று, அழியும் எந்தப் பொருளுக்கும் ஆக்குபவன் அல்லது படைப்பவன் ஒருவன் வேண்டும். நாம் காணும் பிரபஞ்சம் ஒரு காலத்தில் பிரபஞ்ச முட்டையாக (Cosmic Egg) இருந்தது. அதிலிருந்து தோன்றி, விரிந்து இன்றைய நிலைக்கு வந்துள்ளது. நீண்ட காலத்தின் பின் இது சுருங்கி மீண்டும் முன்னர் இருந்த நிலைக்குப் போகும். அதாவது, இப்பிரபஞ்சத்திற்கும் தோற்றம், நிலைப்பாடு, அழிதல் ஆகிய நிலைகள் உள்ளன. இதனால் இதனையும் படைத்தவன் ஒருவன் இருக்கிறான் என்று நம்பலாம். அவனைப் பொதுவாகக் கடவுள் என்கிறோம்.

**2. சைவசமயம் கடவுளை எவ்வாறு நோக்குகிறது?**

எல்லா உயிர்களுக்கும், எல்லா நாட்டினருக்கும் தலைவனாகக் கடவுளைச் சைவம் கொள்கிறது. எல்லா நற்பண்புக் கூறுகளின் முடிந்த முடிவாக, செம்மையின் நிறைவாக, இறைவனைக் கண்டு, அவனைச் சிவன் என்று அழைப்பது தமிழகத்துப்

பண்பாகவும் மரபாகவும் உள்ளன. மாணிக்கவாசக சுவாமிகளின் பின்வரும் திருவாசகத் தொடர் இதனை உணர்த்துகிறது.

**'தென்னா டுடைய சிவனே போற்றி!**
**என்னாட் டவர்க்கும் இறைவா போற்றி!'**

உலகுக்கு ஒருவனான இறைவனை தமிழர்கள் சிவன் என்று போற்றுகிறார்கள். சிவம் என்னும் சொல் செம்மை, மங்கலம் என்னும் பொருள் தருவது.

**3. சிவன் எத்தகையவன்? அவனது அருள் எத்தகையது?**

சிவனின் உள்ளார்ந்த இயல்பு அறிவு வடிவு. எங்கும் பரந்தும் எதிலும் கலந்தும் எதனையும் கடந்தும் இருப்பது அவனின் தன்மை. **'அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து',** என்பது திருவருட் பயன் தரும் விளக்கம். **கடவுள்** என்ற தமிழ்ச் சொல் எதனையும் கடந்தும், எதனுள்ளும் கலந்தும் இருக்கிறான் என்பதை உணர்த்துகிறது.

சிவன் உயிர்களின் மேல் அளவற்ற கருணையுள்ளவன். அறிவாகிய சிவனின் பிரிவில்லாதது அவனின் பெருங் கருணையாகிய அருள். ஞாயிறும் ஒளியும் போல் சிவனும் அவனின் அருட்சக்தியும் பிரிவில்லாதவை.

**4. பதி என்ற பெயரைவிட வேறு பெயர்கள் சிவனுக்கு உண்டா?**

உயிர்களுக்குத் தலைவன் என்ற பொருளில் அவன் பதி என்று அழைக்கப்படுகிறான். உயிர்களுக்கு அருள் வழங்கும் அவனின் நிலை பதி நிலை. இது அவனின் பொது நிலை. தன் நிலையில் பரன், தற்பரன், சிவன், சுத்த சிவன் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறான். இப்பெயர்கள் தமிழ் நூல்களில் காணக் கூடியன. வடமொழி நூல்களில் **பிரமம்** என்று அழைக்கப்படுவதைக் காணலாம்.

**5. சிவனின் இயல்புகள் எத்தனை? விளக்குக.**

மாறுதல் அடையாமல் நிலைத்தல் உடைமை, பேரறிவு உடைமை, பேரின்பமுடைமை

ஆகியவை சிவனின் குணங்கள் என உபநிடதங்கள் உணர்த்துகின்றன. இவை முறையே சத்து, சித்து, ஆனந்தம் எனப்படும். **சச்சிதானந்தம்** (சத் + சித் + ஆனந்தம்) என்ற இறைவனின் பெயர் இதனைக் குறிப்பது. ஆகமங்கள் சிவனை எட்டுக் குணங்கள் உடையவன் என்று கூறும். இக்குணங்கள் வருமாறு:

1. தன்வயத்தன் ஆதல் (சுவ தந்திரத்துவம்)
2. தூய உடம்பினன் ஆதல் (விசுத்த தேகம்)
3. இயற்கை உணர்வினன் ஆதல் (அனாதிபோதம்)
4. முற்றும் உணர்தல் (சர்வஞ்ஞத்துவம்)
5. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் (நிராமயம்)
6. பேரருள் உடைமை (அலுப்த சக்தி)
7. முடிவிலாற்றலுடைமை (அநந்த சக்தி)
8. வரம்பிலின்பமுடைமை (நித்திய திருப்தி)

(எண் குணங்களும் தமிழில் தரப்பட்டு அவற்றின் வடமொழிப்பதங்கள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன.)

இறைவன் **எண்குணத்தான்** என்ற பெயரில் திருக்குறளிலே குறிக்கப்படுகிறான்.

**'கோளிற் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை'.**

- குறள்

இக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர், இறைவனின் எண்குணங்களாக மேலே குறிப்பிடப்பட்ட குணங்களைத் தருகிறார். முடிவிலே, **'இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது'** என எழுதுகிறார். பரிமேலழகர் ஒரு வைணவ சமயத்து ஞானி என்பது குறிப்பிடத்தக்கது.

மேலே கூறப்பட்ட எட்டுக் குணங்களும் ஆகம வழக்காக வந்தவை. உபநிடத வழக்காக வந்த சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று குணங்களின் விரிவாக இவை உள்ளன.

**6. கடவுளுக்குக் குணங்கள் இல்லை அவன் குணங்களைக் கடந்தவன், என்றெல்லாம் சொல்லப்படுகிறதே. இது குறித்த விளக்கம் என்ன?**

கடவுள் நிர்க்குணன் (குணங் களற்றவன்), குணாதீதன் (குணங்களைக் கடந்தவன்) என்றெல்லாம் கூறப்படுவது உண்மை. இவற்றின் பொருள் உயிருக்கு உள்ள குணங்கள் அல்லது இயல்புகள் இல்லாதவன் என்பதே. சத்துவம், இராசதம், தாமசம் ஆகியவை உயிரின் இயல்புகள். இறைவனுக்கு உயிருக்குள்ள இத்தகைய இயல்புகளும் இல்லை, குணங்களும் இல்லை. இவற்றைக் கடந்தவன் இறைவன்.

**7. கடவுளின் பொது இயல்பு, சிறப்பு இயல்பு என்பவை எவை?**

கடவுளின் இயல்பு இரண்டாகக் கொள்ளப்படும். இவை சிறப்பு இயல்பு, பொது இயல்பு ஆகும். இவற்றை முறையே சொரூபலக்கணம், தடத்தலக்கணம் என்பர். சைவசித்தாந்தத்தில் காணப்படும் இறைவன், உயிர், ஆணவம், கன்மம், மாயை ஆகிய ஐந்திற்கும் இத்தகைய இருவித இயல்புகள் உண்டு.

எதிலும் தொடர்பு இன்றித் தன்னளவில் நிற்பது சொரூபலக்கணம் என்னும் சிறப்பு இயல்பு. இந்நிலை அதன் காரண வடிவு என்று கொள்ளப்படும். பிறபொருள்களோடு தொடர்பு கொண்டு நிற்கும் நிலை தடத்தலக்கணம் என்னும் பொது இயல்பு. இந்நிலை அதன் காரிய வடிவு என்று கொள்ளப் படும்.

இறைவன் தன்னளவில் எந்த மாறுதலுமின்றி, உயிர்களுடனும் பிற பொருட்களுடனும் எந்தத் தொடர்புமின்றி இருக்கும் நிலை அவனின் சிறப்பு இயல்பு. அவன் அவற்றுடன் தொடர்பு கொண்டு இருக்கும் நிலை அவனின் பொது இயல்பு.

இறைவனின் பொது இயல்பாக இரு நிலைகள் உள்ளன. ஒன்று அவனின் பிரிவில்லாத அருளைத் திருமேனியாகக்

கொண்டு பல வடிவங்கள் தாங்கி நிற்கும் நிலை. இன்னொன்று உயிர்களுடனும் பிற பொருட்களுடனும் ஒரே நேரத்தில் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கும் நிலை. இது அவன் கொள்ளும் அத்துவித உறவு நிலை.

**8. சைவசமயத்தில் கடவுளின் வடிவம் எத்தகையது?**

சிவன் தன்நிலையில் அனைத்தையும் கடந்ததாக இருப்பின் அவனால் உயிர்களுக்கு எத்தகைய பயனும் விளையப் போவதில்லை. உயிர்களின் மேற்கொண்ட கருணையால், அவற்றிற்கு உதவுவதற்காக அவன் தனது அருளையே திருமேனியாகக் கொண்டு வேறுபட்ட வடிவங்கள் எடுக்கின்றான். அவற்றின் மூலம் பல அருட்செயல்கள் புரிந்து உயிர்களுக்கு நலமளிக்கிறான். அவனின் அருளும் அருட் செயல்களும் அறிவின் காரியமாக அமைந்தவை. ஞானசக்தி எனப்படும் அவனின் அறிவு **'சக்தி'** என்பதால் அவன் கொண்ட வடிவங்கள் சக்தி திருமேனிகள் எனப்படும். அவனது அருட் செயல்கள் சக்தி செயல்கள் எனப்படும்.

இறைவன் மூவகைத் திருமேனிகள் கொண்டு அருட் செயல் புரிகிறான். இவற்றில் ஒன்று அருவத் திருமேனி. இது கண்ணுக்குப் புலனாகாதது. மற்றையது உருவத் திருமேனி. இது கண்ணுக்குப் புலனாவது. மூன்றாவது அருவுருவத் திருமேனி. இது அருவத்துக்கும் உருவத்திற்கும் இடைப்பட்டது; ஒரு பொழுது கண்ணுக்குப் புலனாகியும், புலனாகாமலும் இருக்கும் உருவம் இது. ஆகவே, இறைவன் கொள்ளும் வடிவங்கள் அருவம், உருவம், அருவுருவம் என மூன்று நிலைகளில் உள்ளன. (இவற்றின் விரிவான விளக்கும் பின்வரும் பாடங்களில் தரப்படும்).

**9. இறைவனின் அருட் செயல்கள் முத்தொழில் என்றும் ஐந்தொழில் என்றும் கூறப்படுகின்றன. இவற்றின் பொருள் என்ன?**

உயிர்களுக்கு வேண்டிய உடம்பையும், உடற்கருவி

களையும், உயிர்களின் அனுபவத்திற்கான உலகையும் இறைவன் படைத்தளிக்கிறான். இது அவனின் படைத்தல், தொழில் படைத்தவற்றை ஒரு கால அளவுக்கு நிலைபெறச் செய்கிறான். இது அவனின் காத்தல் தொழில். அவற்றின் காலம் முடிந்தபின் அழிக்கிறான். இது அவனின் அழித்தல் தொழில், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய இம்மூன்றும் முத்தொழில் எனப்படும்.

உலக வாழ்வில் உயிர் செயல் புரிந்து, அனுபவம் பெற்று, அறிவு விளக்கம் பெறுகிறது. இதற்குத் துணைபுரிவது இறை அருள். ஆனால் அது தன்னை உயிருக்குக் காட்டாமல் மறைத்துக் கொண்டிருக்கிறது. இது இறைவனின் மறைத்தல் தொழில். ஆன்மீக வளர்ச்சியடைந்த உயிருக்கு இறுதியில் இறைவன் தன்னைக் காட்டி அருள்புரிகிறான்; உயிர் முத்தியடையத் துணை புரிகிறான். இது அவனின் அருளல் தொழில். முத்தொழிலுடன் மறைத்தல், அருளல் ஆகிய இரண்டையும் சேர்த்து ஐந்தொழில் என்று கூறுவர். காத்தலில் மறைத்தலும், அழித்தலில் அருளலும் அடங்கும். ஆகவே முத்தொழில் என்பதும் ஐந்தொழில் என்பதும் வேறுபட்டவையல்ல என்பது கருதற்பாலது. இறைவன் உயிர்களின் நலத்திற்காகவே ஐந்தொழில் புரிகிறான். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் வடமொழியில் முறையே சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரம் எனப்படும்.

**10. சைவத்தில் எத்தனை கடவுளர் உள்ளனர்?**

சைவத்தில் கடவுள் ஒருவரே. அவரைச் சிவம் அல்லது சிவன் என்று சைவர்கள் அமைக்கிறார்கள். "ஒன்றே பதி" என்று சிவஞானபோதம் கூறுகின்றது.

**'ஒருவன் என்னும் ஒருவன் காண்க'** என்று திருவாசகமும்

**'ஒருவனே தேவனும்'** என்று திருமந்திரமும் உரைக்கின்றன.

ஒன்றாகிய சிவம் உயிர்களுக்கு அருளுவதற்காகப் பல வடிவங்கள் எடுக்கிறது. அவை வேறு வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

11. **அம்பிகை, விநாயகா, போன்ற தெய்வங்கள் சிவனின் வேறானவையல்லவா? அப்படியாயின் ஒன்றே பதி என்று எங்ஙனம் உரைக்கலாம்?**

நாம் பார்த்து வணங்கும் வடிங்களெல்லாம் சிவனின் வடிவங்களே. அம்பிகையின் வடிவம் சிவனின் அருளைக் குறிப்பது. விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திரர் ஆகிய தெய்வங்கள் அருளும் வகையால் சிவன் கொண்ட திருவடிவங்களே. ஒரு மனிதன் வீட்டில் தந்தை, கணவன் போன்ற நிலைகளிலும், வெளியில் ஆசிரியர், பொறியியலாளர் போன்ற நிலைகளிலும், காணும் வடிவங்கள் போன்றவை இவை. இவற்றை விட சிவமூர்த்தங்களாக இருபத்தைந்து வடிவங்கள் கூறப்படுகின்றன. தட்சணாமூர்த்தி, நடராசர் போன்ற வடிவங்கள் இவற்றில் அடங்கும். சிவலிங்க வடிவமும் இவையும் சைவர்களின் வழிபாட்டுக்குரிய வடிவங்கள்.

நன்றி
சைவசித்தாந்த வினாவிடை
திருவருள் வெளியீடு.
கொழும்பு,

---

ஒன்றாய் மிகவும் ஒளிகவரா தேல் உள்ளம்
என்றும் அகலா (து) இருள்.

---

# சைவசித்தாந்தத்தில் மாயை உண்மை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இலக்கிய கலாநிதி மு. கந்தையா

குறித்த மந்திரங்களின் பருமட்ட விளக்கமாக உள்ள இவ்வுண்மைகள் ஆன்மாவின் பந்த நிலை, மோக்ஷநிலை இரண்டையும் உள்ளடக்கிய ஒரு முழுமைக் காட்சியைத் தருகின்றன. "ஒன்றாகக் காண்பதுவே காட்சி" 8 என்ற ஔவையார் கூற்றையும் இது நினைவுறுத்துகின்றது. இக்காட்சி தனிப்பட்டவரெவரேனும் படைத்திட்டுக் கொண்ட காட்சியோவன்று. இது தனியாய், தன்னிலே தானாய் அமைந்த காட்சியென்பதை மறுத்தற்கில்லை. சைவசித்தாந்தம் முடிந்த முடிபு என்ற கருத்தை உளங்கொள்வதற்கு இது ஒரு உதாரண விளக்கமாதல் சாலும்.

குறித்த தியான யோக ஞானிகள் கண்டகாட்சி இங்ஙனம் சுவேதாஸ்வதரத்திற் கண்டிருக்கிறது. இது போலவே வேதத்தின் பிற பகுதிகளிலும் இதன் வெவ்வேறம்சங்கள் வெவ்வேறு விதத்திற் கண்டிருக்கின்றன. அவ்வாறே சிவாகம ஞானபாதங்களிற் கண்டிருக்கிறது. திருமந்திரத்திற் கண்டிருக்கிறது. மெய்கண்ட சாத்திரங்களிற் கண்டிருக்கிறது. நமது சமயாசாரியர்களின் அருளிச் செயலாகிய திருமுறைகளிற் கண்டிருக்கிறது. சமீப காலத்தவரான அருணகிரிநாதர், தாயுமானவர், குமரகுருபரர் போன்ற மெய்ஞ்ஞான மேதைகளின் பிரபந்தங்களிலுங் கண்டிருக்கிறது. ஆனால் இவற்றுள் வேதம், சிவாகமம் என்ற இரண்டும் சிவபரம்பொருளின் நேர்முக அருளிப்பாடுகள் என்பதனால் முதன்மைக் காட்சிகளாய் அமைந்தவை. எனினும் அவற்றுள்ளும் வேதங் கொண்டிருப்பது பதி, பசு, பாச இலக்கணத்தைப் பொறுத்தவரையிற் பொதுக்காட்சி எனவும் சிவாகமங் கொண்டிருப்பது சிறப்புக்காட்சி எனவுங் கொள்வது மரபு 9.

வேதம் சிவாகமம் இரண்டும் நீங்கலாக உள்ள திருமந்திரம் முதலாயவற்றிற் காணப்பட்டவைகளும் சம்பந்தப்பட்ட அவரவர் காட்சிகளே அவை. சிவனருளால் அவர்கள் கண்டதை அவனருளால் உலகறியச் சொன்னார்கள்.

அவர்கள் சொல்லியதும் 'உள் நின்ற நாவுக்கு உரையாடியாம்' 10 என்ற பண்பிற்கிணங்கச் சிவ னவர்க்கு 'நாவாகி நாவுக்கோர் உரையுமாகி' 11 நின்று சொல் வித்த அளவே சொன்னார்கள். அது அவரவர் வாக்கிலேயே புலப் பட்டிருத்தல் கண்கூடு. 12 ஆத லால், அவரவர்களைத் தாரதம் மியப்படுத்தற்குரியோமல்லோம். நாம். இவர்களில் எவர் அருளிப் பாட்டினையும் அணுகும் முறை யால் அணுகிச் சைவத்துக்குச் சிறப்பு எனப்பட்ட சிவாகம உண்மைகளுக்கு மாறுபடா வகை யில் ஆராய்ந்து கைக்கொள்வ தற்கே உரியோம் யாம். சைவ சித்தாந்த ஆய்வியலிற் செல் வோர்க்கு இது முக்கியமான ஒரு நிபந்தனையும் ஆம்.

சைவசித்தாந்தத்தைப் பொறுத் தமட்டில் வேதத்தின் பொது வாந்தன்மையும் ஆகமத்தின் சிறப்பாந் தன்மையும் யாழ்ப் பாணத்தில் வெளிவரும் சிவத் தொண்டன் என்ற மாசிகை இத ழொன்றில் '**வேதம் பொது ஆக மம். அருஞ்சிறப்பு நூலாம்**' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இவ் வாசிரியரின் கட்டுரையில் விளங் கக் காணலாம 13. அதன் சார் பான பின்வருங் கருத்தம்சங்களை முதலிற் குறித்தக் கொள் ளுதல் வேண்டும். சைவ சித்தாந்த உண் மைப் பொருளாய்வு சிவாகமங் களுக்கு மாறுபடா வகையில் அமைய வேண்டுவதேன் என்ற விளக்கம் அதனால் ஏற்படும்.

1. மேல் நான்காம் பந்தியில் சங்கரபண்டிதர் கூற்றாகக் குறிக்கப்பட்ட சமய இலக் கணம், '**பதார்த்த நியமமே சமயம்**' என்கின்றது. அதற் கிணங்கப் பதி, திருவருள், பசு, திரோதனம், ஆணவம், கன்மம், மாயை என்ற சமய உள்பொருள்களை ஒன்றை மற்றொன்றாக மயங்கற்கிட மில்லா வகையில் தனித்தனி தெரித்து அவ்வவற்றின் பொருள் தன்மையைப் பொதுவிலக்கணம் சிறப் பிலக்கணம் என்ற இருவகை இலக்கணத்தாலும் காட்சி, அநுமானம், ஆகமம் என்ப வற்றிற் பொருத்தமானவற்றி னாலும் வரையறுத்திருக்கும் நிலை சிவாகமத்தில் மட் டுமே முதல் வரவாக வந்துள் ளது. '**இலக்கணப்பிரமாணங் களால் வஸ்து சித்தியாம்**' என்பர் சங்கரபண்டிதர் 14.

2. சமய பதார்த்தங்களைச் 'சத்து' 'அசத்து' 'சதசத்து' எனக் கூறுபடுத்திப் பொருள் நியமஞ் செய்து ஒன்றன் சாதி, பண்பு, தொழில் என்பன மற்றதன் சாதி, பண்பு, தொழில்களுக்கு வேறாக இருக்கும் வரையறை இலக்கணம் சிவாகமங்களிலேயே இடம்பெறக் காணப்பட்டுள்ளது.

3. அசத்து வகையினவாய பதார்த்தங்கள் காரணநிலை, காரிய நிலை என இருவேறு நிலை கொண்டவை என்பதை விளக்கி அதன் மூலம் காரியமாயிருந்து அழிவெய்துவனவாகக் காணப்படும் பொருளனைத்தும் காரண நிலையில் உள்பொருள்களே என நிறுவியதுஞ் சிவாகமமே. அன்றியும் அவ்வகையால் 'உள்ளதாகிய காரணத்திலிருந்து உள்ளதாகிய காரியந் தோன்றும்' 'உள்ளது போகாது இல்லது வராது' என்ற சற்காரிய நிலையை அறிவுறுத்திப் பகுத்தறிவுணர்ச்சிக்குக் கூடப் பொருத்தமான விளக்கந் தந்து வைத்தது சிவாகமமே.

4. ஆன்மா பந்தமெய்துகிறது, அதனால் இன்பதுன்ப நிலைகளை அடைகிறது எனில், அதற்குக் காரணம் இன்னது. மீள அது விடுதலையெய்துகிறது: அதனால் சாமானிய இன்ப துன்பச் சார்பற்ற நிரதிசயானந்த இன்பம் அடைகிறது எனில், அதற்குக் காரணம் இன்னது எனத் தரம் பிரித்துக் காட்டி வைத்ததும் சிவாகமமே.

5. சிவம் ஆன்மா என வேறு வேறாய இருபொருட் கூட்டத்தில் சிவம் கலப்பினால் ஒன்றாயும் பொருள் தன்மையால் வேறாயும் செலுத்துந் தன்மையால் உடனாயும் நிற்கும் புதிரை வெளிப்படுத்தும் வகையால் வேதநூற் கல்வியாளர்களாற்பெரும் பிரச்சனைக்குட்படுத்தப்பட்டிருந்த அத்துவிதம் பற்றிய விளக்கத்தை வேத நூலுண்மைகளுக்குமே பொருத்தமாக அறிந்தமைத்துக் கொள்ளுதற்காம் உத்திகளைத் தந்ததும் சிவாகமமே.

சமய பதார்த்த நியம விஷயத்திற் சிவாகமங்கள் முதன்மை பெறக் காரணமாயிருந்தவற்றிற்

சில இவை - சைவ சித்தாந்த உண்மை விளக்கத் துறையில் இவற்றால் விளைந்த பேறுகள் மகத்தானவை. குறித்த முதலாவ தன் மூலம் பதியைப் பசு வென் றும் திருவருளை மாயை என்றும் இங்ஙனம் தடுமாறிக் கொள்ளும் மயக்க நிலைச் சார்புகள் தவிர்க் கப்பட்டன. இரண்டாவதன் மூலம், மாயையின் தொழில் விளக்கல்; ஆதலால், அது ஆணவத்தின் தொழிலாகிய மறைத்தலைச் செய்யாது என்பது போன்ற துணிபுகள் விளக்கமுற்று அதன் மூலம் மாயையே மறைத் தலைச் செய்யும் ஆணவம் வேண்டிய தில்லை எனத் தட்டிக்கழித்து ஆன்மாவில் ஆணவ இருப்புக் கொள்ளாத ஐக்கியவாத சைவர் போல்வார் கொள்கைத் தவறு புலப்படுத்தப்பட்டது. அத்துடன் பிரமத்திலிருந்தே பிரபஞ்சந் தோன்றும், சீவர்களும் அதிலி ருந்தே தோன்றும் என்ற பாற் கரியர் கூற்றான ஏகான்மவாதக் கருத்தும் ஏன்? இன்றைய ஹவாய் சைவசித்தாந்த ஆதீனத்தாரின் அத்தகைய கருத்துங்கூடத் தவ றெனக் காண்டதற்குரிய ஆதாரம் வகுத்து வைக்கப்பட்டுள்ளது. மூன்றாவதன் மூலம் பிரபஞ்சம் மாயையிலிருந்தே தோன்றும். மஹாசங்கரத்தின் பின்னும் மாயை தன் காரணநிலையில் இருந்தே யாகும். ஆதலால், அதுவும் அநாதி என்ற உண்மை நிறுவப் பட்டுள்ளது. நாலாவதன் மூலம் பந்த நிலையில் ஆன்மாவின் இன் பதுன்பங்கட்குக் காரணம் ஆண வச் சேர்க்கை; திரும்ப முத்தி நிலையில் அதற்குச் சாமானிய இன்பதுன்பச் சார்பில்லாத நிரதி சயானந்த இன்பம் நிகழக்கார ணம் ஆணவ நீக்கம் என இரு நிலைகள் இருக்கும் உண்மை பிரஸ்தாபிக்கப்பட்டது. ஐந்தாவ தன் மூலம் முத்தி நிலை யிலும் ஆன்மா தன் அறிவிச்சை செயல் களுக்குக் கேடில்லாமற் சிவ னோடு கலப்பினால் ஒன்றாயும் பொருள் தன்மையால் வேறாயும் உடனிருந்து பேரின்ப அனுபவம் பெறும் உண்மை - யதார்த்தமான அத்துவித உண்மை - தெட்டத் தெளிய விளக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் உதாரணம் என்றபாங்கில் வகைக்கொன்று காட்டப்பட்டன என்றே கொள்ள வேண்டும். விரிவாக நோக்கில் குறித்த ஒவ்வொரு பகுதியாலும் சித்தாந்த விளக்கத் துறையில் விளைந்த பேறுகள் எத்தனையோ பலவா யிருக்கும்.

சமய பதார்த்த நியமத்திற் சிவாகமங்கள் முதன்மை பெற்ற

தன் காரணத்தை இவ்வாறு தெளிந்து கொள்ளலாம். இச்சிவா கமப்பொருள் மரபு, உணர்த்தும் மரபு சுவபக்க நோக்கிற் பரபக் கத்தை மறுத்துப் பரபக்க நோக் கிற் சுவபக்கத்தை நிலைநாட்டும் மரபு என்பவற்றை முற்றிலும் அடி யொற்றியே தமிழில் வாய்ந்த மெய்கண்ட சாஸ்திரங்கள் பதி னான்கும் எழுந்துள்ளன. இவ் விளக்கத்துக்குப் பிற ஏதுக்கள் அநாவசியம் காட்சியளவையே போதும். அத்துடன், மெய்கண்ட சாஸ்திரங்கள் சிவாகமஞ் சொல் லியதை அப்படியே மனப்பாட மாக ஒப்புவித்தவைகளுமல்ல. ஆகமந் தெரிவித்தவற்றுடன் (அவ் வச்சாஸ்திர ஆசிரியர்களின்) குரு வாக்கு, சுவாநுபூதி என்ற இரண்டையுஞ் சேர்த்துக் கலந்து வெளிப்படுத்தியிருத்தல் ஒன்று. 14 தமிழ் அறிவாசாரா உண்மைக் குப் பழக்கமான பலவேறு உதார ணங்களையுஞ் சேர்த்துக் கொள்கை விளக்கஞ் செய்திருப்ப தொன்று. முப்பொருளுண்மை முழுவதையும் பிரமாணம், இலக் கணம், சாதனை பயன் என வரை யறைப்படுத்தித் தெரிவித்திருக் கும் விசேஷமொன்று. சாஸ்வத மான வேத உபநிடத உண்மை களுக்கும் சிவாகம உண்மை களுக்கும் தமிழிலுள்ள திருமுறை அநுபூதி உண்மைகளுக்கும் திருமூலர், தாயுமானவர் முதலான மெய்யியலாளர் கூறும் உண்மை களுக்கும் நேருக்கு நேர் பொருந் துமாறு சித்தாந்தாந்த விளக்கஞ் செய்திருத்தல் ஒன்று. இத்தியாதி காரணங்களால் ஒருவகையிற் சிவாகமங்களினும் முதன்மை மிக்கனவாகக்கூட மெய்கண்ட சாஸ்திரங்களைக் கொள்ள வேண்டும் நிலையுமுண்டு.

குறித்த காரணங்களில் இறு திக் காரணத்தை ஒரு உதாரண மூலங்கண்டு கொள்ளுதல் நல மாகும். ஏகனாகிய பதியும் அநேக னாகிய பசுவும் இருள், கருமம், மாயை இரண்டு ஆகிய பாசமும் அநாதி என்கின்றது மெய்கண்ட சாஸ்திரங்களில் ஒன்றாகிய திருவருட்பயன். 15 அதே உண்மை முண்டக உப நிடதத் திற் பின்வருமாறு அமைந் திருக்கின்றது. சரீரமாகிய ஒரே விருட்சத்தில் புருடன் சுதந்திர மின்மையால் மயங்கித் துன்புறு கிறான். அவன் எப்போது சிவ னைப் பதியாக அறிந்து அவர் அருளைப் பெறுகிறானோ அப் போது துன்பம் நீங்கி இன்புறு கிறான். 16 இது உபநிடத மந்

திரம். இதில் விருக்ஷமென்ற சரீரம் - மாயை சுதந்திரமின்மை, மயக்க முண்மைகளால் அறியக்கிடப்பது அவற்றின் காரணமாகிய ஆணவம். இவ்விரண்டும் பாசம், புருடன் பசு, சிவம் - பதி எனப் பதி, பசு, பாசம் மூன்றும் அறியப்படுகின்றன.

**'பதி, பசு, பாசம் எனப் பகர் மூன்றில்**
**பதியினைப் போல் பசு, பாசம் அநாதி'** 17

என்ற திருமந்திரமும் இவ் வுண்மையைக் குறிப்பிடுகிறது.

**'விளையாததொர் பரிசில்வரு பசுபாசவே தனையொண்**
**தனையாயின் தவிரவ்வரு தலைவன் தன திடமாம்')** 18

என்ற தேவாரத்தில் தலைவன் - பதி, பசு, பாசம் இரண்டும் நேரடியாகவே உள்ளன. அத்துடன் "விளையாததொர் பரிசு" என்றதன் மூலம் பசுவும் பாசமும் அநாதியெனவுஞ் சொல்லாமலே சொல்லப்பட்டுள்ளன. இனி, திருவருட்பயன் தவிர்ந்த ஏனை மெய்கண்ட சாஸ்திரங்களிலும் சைவ புராணங்களிலும் இவ்வுண்மை பெருவரவாதல் பிரசித்தம். இதே முறையிற் பார்த்தால், மெய்கண்ட சாஸ்திர உண்மைகளின் அகில மளாவிய யதார்த்த பாவ நிலை இருந்த வண்ணம் இதுவாகும். இதனால் எந்த நூலிற் கூறப்பட்டதாயினும் சைவசித்தாந்த உண்மையொன்றுக்கு உரைகல்லாயிருக்கும் பாங்கு பொது நிலையிற் சிவாகமத்துக்கும் சிறப்பு நிலையில் மெய்கண்ட சாஸ்திரங்களுக்கும் உரியதாதல் உறுதியாகும். தற்செயலாக யாரேனுஞ் சைவசித்தாந்த உண்மையொன்றை ஏதாவதொரு நூலிற் கண்டு தவறாக விளங்கிக் கொண்டு முரண்பட வந்தாலும் அவர் பேரிலான தவற்றை இனங்கண்டு காட்ட ஆதாரமாந் தகுதியும் இச்சாஸ்திரங்களுக்கே உண்டென்பதும் உறுதியாகும்.

இது இவ்வாறாக, **'பதி பசு பாசம்'** எனத் தொடங்கும் முற் குறித்த திருமந்திரத்தின் இறுதி யடியாக உள்ள **'பதியணுகிற் பசு பாசம் நில்லாவே'** என்பதற்கு, சிவம் அனுக வருங்கால் பசு பாசம் என்ற இரண்டும் நில்லா, அவை அழியும் என அர்த்தம் பண்ணிக்கொண்டு அதையே

ஆதாரமாகக் காட்டி மகா பிரளயத்திலும் முத்தி நிலையிலும் ஆன்மாவிற் செம்பாதி அழியும். ஆதலால் அப்பாதி கடவுளாற் படைக்கப்பட்டது. மறுபாதி சிவனின் வேறன்று. அது சச்சிதானந்தம் பரசிவம்: அது சிவனின் ஒன்றி ஒன்றாய் வீடும் என வாதிக்க முற்பட்டிருக்கிறார்கள் ஹவாய் ஆதீனத்தார். இவர்கள் கருத்தின்படி அடுத்த மகாசிருஷ்டியில் முன் தன்னிடத்தில் ஒடுங்கின உயிரை மீள்படைப்புச் செய்யும் அவசியம் ஒன்று சிவனுக்கு உளதாதல் வெளி. அவர்கள் அதைப் பகிரங்கமாக ஒத்துக்கொள்கிறார்கள். ஹவாய் சைவாதீனத்தினால், சைவசித்தாந்தத்தில் ஒருமை வாதமும் பன்மை வாதமும் என்ற பெயரில் 1984 ஜனவரியில் வெளியான திருத்தப் பதிப்பில், பக். 5 பகுதி 6 இக்கருத்தைக் கொண்டுள்ளது. பதி, பசு, பாசம் பற்றி யாம் மேற்கண்டவாறுள்ள மரபு வழிப்பட்ட சிவாகம மெய்கண்ட சாஸ்திர உண்மைகளைத் திருப்பிப் படைக்கும் ஊக்கம் இவர்களிடம் காணப்படுகிறது. அவை கூறும் வாதம் பதி, பசு இலக்கணங்களின் ஸ்திரத்தன்மையைப் பதம் பார்க்கும் ஒரு நிலையும் ஏற்பட்டுள்ளது கண்கூடு.

பதி ஏகபரிபூரணம் என்பது தான் இன்றுவரை சைவம் அறிந்த, உண்மை. இவர்கள் பதிக்கு மூவித பூரணத்துவம் பேசுகிறார்கள். சச்சிதானந்தம் ஒன்று பரசிவம் ஒன்று ஆன்மாவாம் நிலை ஒன்று என மூவித பூரணத்துவம், - அவர்கள் வாக்கில் **'பெர்வெக்ஷன்'** - காட்டப்படுகிறது. தோற்ற அழிவில்லாத அநாதி நித்தியப் பொருள் ஆன்மா, **'ஆன்மா நித்தியம்'** என்'பதே சிவயோக சுவாமிகளின் வாக்கும். இவர்கள் என்றும் இல்லையெனப்பட்ட தோற்றமும் அழிவும் ஆன்மாவுக்கு உள்ளதென வாதிக்கிறார்கள். ஆன்மாவுக்கு இலையிரட்டை, காயிரட்டை போன்ற ஒரு இரட்டையியல் புண்டென்றும் அதில் ஒரு பகுதி அதன் **'எசென்ஸ்'** மறுபகுதி **'சோல் பொடி'**: **'எசென்ஸ்'** அழியாது: **'சோல்பொடி'** அழியும். இந்த **'சோல் பொடி'** தான் ஆன்மாவின் தனித்துவம். **('இன்டிவிச்வரீரி')** அது அதன் அறிவிச்சை செயல் மயமானது, அது மகா சிருஷ்டியில் சிவனாற் படைத்தளிக்கப்படும், மீள மகா பிரளயத்திற் சிவனால் அழிக்கப்படும் என்பது இவர்கள் கருது நிலை. இத்த

கைய இவர்களின் மற்றுங் கருது நிலைகளைப் பின் போட்டு இக்கருது நிலையை மட்டும் பரிசீலிப்போம்.

தங்கள் கருதுகோள்கள் எல்லாவற்றுக்கும் திருமந்திரமே ஆதாரம் என்ற தமது நோக்கிற்கிணங்க இவர்கள் ஆன்மா பற்றிய இக்கருத்துக்கும் மேற்குறித்த **'பதியணுகிற் பசு, பாசம் நில்லாவே'** என்ற பகுதியை ஆதாரங் காட்டுகிறார்கள். சித்தாந்த உண்மை நோக்கில் அது தவறு. அத் தொடர்க்கு அவர் கள் கொண்ட பொருள் தவறென்பதற்குக் குறித்த அதே மந்திரத்தின் முதலீரடிகளே அகச் சான்றாவன். முத்தி நிலையிலும் ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் நீங்காதிருக்கும், எனக்காட்டும் "அயரா அன்பின் அரன்கழல் செலுமே" என்ற சிவஞானபோதப் பதினொராஞ் சூத்திர வாக்கியமும் (அயராமை - அறிவு, அன்பு - இச்சை, செலல்கிரியை) அதற்குச் சமதையான மற்றும் மெய் கண்ட சாஸ்திரக் கூற்றுகளும் புறச்சான்றாவன. "சிறுமா னேந்தி தன் சேவடிக் கீழ்ச் சென்றங் கிறுமாந் திருப்பன் கொலோ" 20 **'உகந்தன் பாய்ப்புரிந்து நிற்பதென்று கொலோவென் பொல்லா மணியைப் புணர்ந்தே 21'** என்பனவாதி திருமுறை அநுபூதி வாசகங்கள் அதற்கு மேலதிகப் புறச் சான்றாகும். "அம்ருதம் அச்னுதே 22 - சிவானந்தம் துய்க்கின்றனன் எனவும், 'விந்ததே அம்ருதம் 23 - ஆனந்தம் அடைகின்றனன் எனவும் **'விஞ்ஞாய அம்ருதம் அச்னுதே விஞ்ஞாய அம்ருதம் அச்னுதே'** அறிந்து ஆனந்தம் அனுபவிக்கின்றான் அறிந்து ஆனந்தம் அநுபவிக்கின்றான் எனவும் உபநிடதங்களில் வருவன மேலும் மேலதிகப் புறச்சாற்றுகளாம் முத்தி நிலையிற் பசுவின் அறிவிச்சை செயல்களாய தனித்துவம் அழிவது உண்மையெனில், மேற்குறித்த வாறான அறிதலும் அனுபவித்த லும் செய்ததுள்ளது என்ற வினாவுக்கு இது விடை.

(தொடரும்)

நன்றி
*சைவ சித்தாந்தத்தில்*
*மாயை உண்மை*
*– கோலாலம்பூர் மலேசியா –*

# சேக்கிழாரும் சைவசித்தாந்தமும்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

**ந. ரா. முருகவேள்**

**(3) சேக்கிழாரும் சித்தாந்த நூல்களும்:**

சேக்கிழார் பெருமான், திருமுறையாசிரியர்கள் பலருள் ஒருவர். சைவ சித்தாந்தம் என்பது, மெய்கண்டார் முதலிய சந்தானாசிரியர்களால் விளக்கப் பெற்ற சிவநெறிக் கொள்கை. திருமுறைகள் பதினான்கு என்றும், தனித் தனியாகவே பிரித்துக் குறிப்பிடப் பெறுகின்றன. சேக்கிழார் பெருமான் சிவனடியார்களாகிய அறுபான் மும்மை நாயன்மார்களின் வரலாறுகளைப் பாடியவர். அவர் தமது திருத்தொண்டர் புராணத்துடன் சைவசித்தாந்தக் கொள்கைகளை நிரலே கிளந்தெடுத்துக் கொண்டு வரையறை செய்து, வகுத்துரைத்து விளக்கத்தலைப் பட்டிலர்.

**'சைவ சித்தாந்தம்'** என்னும் பெயரால் சிவநெறிக் கொள்கைகளை வரையறை செய்து, அறிவியல் முறைப்படி தடைவிடைகள் அமையவும், தருக்க நெறி முறைகளுக்கு ஏற்பவும், செவ்வி தின் அமைத்துச் சிறப்புற விளக்கியருளிய பெருமக்கள், ஆசிரியர் மெய்கண்டார், அருள்நந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவனார் என்பவர்களேயாவர். சேக்கிழார் பெருமான் காலத்தில் சிவஞான போதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த சாத்திரங்களுள் எதுவும் தோன்றிற்றிலது.

அவைகளெல்லாம் சேக்கிழார் பெருமான் காலத்திற்குச் சிறிது பின்னரே தோன்றலாயின. இந்நிலையில், சேக்கிழார் பெருமான் தமது நூலில் ஏதேனும் சைவ சித்தாந்தக் கருத்தினையோ, அல்லது அதற்குரிய குறியீட்டுச் சொற்களையோ, சொற்றொடர்களையோ (Technical terminology) வழங்கியிருக்கின்றனரா? என ஆராய்ந்தறிய முற்படுதல், நம் அறிவிற்குப் பெரு விருந்தாக அமையும்.

**(4) சித்தாந்தக் குறியீடுகள்:**

சேக்கிழார் சுவாமிகள் **'சித்தாந்த சாத்திரங்கள்'** தோன்றுதற்கு முன்னரே வாழ்ந்திருந்தவராயினும்,

பதி - பசு - பாசம்
இருவினை - மும்மலம்
பெத்தம் - முத்தி
சரியை - கிரியை - யோகம்
ஞானம்
இருவினையொப்பு மலபரிபாகம்
சத்திநிபாதம் - தீக்கை
திருவைந்தெழுத்து

என்பனபோன்ற பல சைவ சித்தாந்தக் குறியீட்டுச் சொற்களையும், அவற்றோடு தொடர்புடைய பலவகைக் கருத்துக்களையும், ஆங்காங்கே தமது நூலில் ஏற்ற பெற்றி குறிப்பிட்டுச் செல்கின்றார். அவற்றுள் ஒரு சில முதன்மையான செய்யுட்களை மட்டும், ஈண்டுக் காண்போம்.

'பொடியார்க்கும் திருமேனிப்
புனிதற்குப் புவனங்கள்
முடிவாக்கும் துயர் நீங்க
முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய
பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுதம்
ஆவதுதான் அற்புதமோ?'
- 1375

"இருவினைப் பாசமும்
மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ்
மாக்கள் ஏறிட
அருளும் மெய்அஞ்செழுத்து
அரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல்
உரைக்க வேண்டுமோ?
- 1399

"பந்தம் வீடு தரும்பரமன்
கழல்' - 300

எனவரும் பாடல்களில் பதி பசு பாசம், பசுபதி, இருவினை, மும்மலம், பந்தம் (பெத்தம்), வீடு (முத்தி), என்னும் சைவ சித்தாந்தக் குறியீட்டுச் சொற்கள், பயின்று வந்திருத்தல் காணலாம்.

'நிலவிய இருவினைவ லையிடை
நிலை சுழல்பவர் நெறிசேர்
புலனுறுமனன் இடைதடை செய்த
பொறிகளின் அளவுளவே'
- 734

'நிலைப்பட்ட மெய்யுணர்வு
நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதற்
குற்றம்போல் ஆயினார்'
- 634

'போதநிலை முடிந்தவழிப்
புக்கு ஒன்றி உடன் ஆனார்'
- 1253

'ஞானம்முதல் நான்கும்மலர்
நற்றிருமந் திரமாலை'
- 3594

'நலஞ்சிறந்த ஞானயோகக்
கிரியா சரியை யெலாம்
மலர்ந்தமொழித் திருமூல தேவர்'
- 3596

எனவரும் பாடல்களில்,

இருவினை
பொறி - புலன் - மனம்
மெய்யுணர்வு நேர்படுதல்
ஒன்றி உடனாதல்
ஞானம் - யோகம் - கிரியை - சரியை

என்பனவற்றைப் பற்றிச், சேக்கிழார் சுவாமிகள் தம் பாடல்களிற் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார்.

'நாணனும் அன்பும் முன்பு
நளிர் வரை ஏறத் தாமும்
பேணுதத்துவங்கள் என்னும்
பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச சார
அணைபவர் போல ஐயர்
நீள் நிலை மலையை ஏறி
நேர்படச் செல்லும் போதில்'
- 752

'முன்னைவல் வினையும் நீங்கி
முதல்வனை அறியும் தன்மை
துன்னினான் வினைகள் ஒத்துத்
துலைஎன நிற்றலாலே'
- 2722

'இந்த வெப்படைய நீங்க
எனக்கருள் புரிவீர் என்று
சிந்தையால் தொழுது சொன்னான்
செல்கதிக்கு அணியன் ஆனான்"
- 2672

என்னும் பாடல்களின் தத்துவங்கள் - சக்தி - சிவம் - இருவினையொப்பு - மலபரிபாகம் ஆகியவை பற்றிய சைவசித்தாந்த நுண்பொருட் கருத்துக்கள், தக்காங்கு அமைந்திருக்கும் திறம், அறிந்தின் புறத்தக்கது.

'திங்கள் சேர் சடையார் தம்மைச்
சென்றவர் காணா முன்னே
அந்தணர் கருணை கூர்ந்த
அருட்டிரு நோக்கம எய்தத்
தாங்கிய பவத்தின் முன்னைச்
சார்புவிட்டகல நீங்கப்
பொங்கிய ஒளியின் நீழற்
பொருவில் அன்பு உருவம் ஆனார்'
- 753

எனச் சத்திநிபாதத் தன்மை பற்றியும்,

'காணாத அருவினுக்கும்
உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு
நிகழ்குறியாம சிவலிங்கம்"

எனச் சிவலிங்கத்தின் சிறப்புப் பற்றியும்,

'தோற்றும் மன்னுயிர்
கட்கெலாம் தூய்மையே
சாற்றும் இன்பமும்
தன்மையும் தந்துபோய்

ஆற்ற அண்டம்
எலாம்பரந்து அண்ணல் வெண்
நீற்றின் பேரொளி
போன்றது நீள்நிலா'

எனத் திருநீற்றினைப் பற்றியும்,

'பஞ்சின் மெல்லடிப்
பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம்
வல்வினை யும்பரன்
அஞ் செழுத்தும்
உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன
இருண்டது நீண்டவான்'
– 305

"ஆதி மந்திரம் அஞ் செழுத்து
ஓதுவார் நோக்கும்
மாதி ரத்தினும் மற்றைமந்
திரவிதி வருமே?

எனத் திருவைந்தெழுத்தினைப் பற்றியும், ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்லும் பெரிய புராணப் பாடல்கள் பலவற்றில், சேக்கிழார் சுவாமிகள் சைவசித்தாந்த சாத்திரங்கள் கூறும் செம்பொருட் கருத்துக்கள் பலவற்றிற்கும், அடிப்படையமைத்து வைத்திருத்தல் அறிந்து மகிழ் தற்குரியது.

'ஓதிய எழுத்தாம் அஞ்சும்
உறுபிணி வரத்தாம் அஞ்சும்'

எனத் திருவைந் தெழுத்தின் சிறப்பையும் பயனையும் விளக்கும் நிலையிற் போதரும் அரிய இனிய அழகிய பெரியபுராண வரி ஒன்றே, அறிஞர்களுக்கெல்லாம் ஆராப் பெருவிருந்தாக அமையும் அன்றோ? கற்பார் நெஞ்சும் களிதுளும்பச் செய்யும் இத்தகைய பொருள் பொதிந்த சிறந்த வரிகள், போற்றற் பாலனவாம்..

(தொடரும்)

நன்றி
பெரியபுராணச் சொற்பொழிவுகள்
– கழக வெளியீடு –

---

அறியாமை உள்நின் (று) அளித்தே காணும்
குறிஆகி நீங்காத கோ.

---

# ௩. துகளறு பேதம்

(ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்)

துகளறு போதம் என்னும் பெயரியதொரு நூல், சைவ சித் தாந்தத்தின் முடியாகிய சிவா நந் தாநுபவத்தை விளக்குவது. அது சிற்றம் பல நாடிகளால் அருளப் பட்டது. அதனைக் குரு முகமாக உணர்தல் வேண்டும். தானே கற்றுணர்வோர் அதிற் கூறும் சிவா நுபவத்தை எய்து வாரல்லர். இக் காலத்தில் தக்க குருவைப் பெறு தல் அரிதாதலின், தாமே கற்கத் தொடங்கி சிவஞானபோதம் முத லிய உண்மை நூல்களையும் இத் துகளறுபோதம் ஆகிய அநுபவ ஞானத்தையும் தவறுற அறிந்து, தம் முடிபே செம்முடிபெனக் கொண்டு தாமுந் தடுமாற்றத் திலுற்று, தம்மைச் சிவஞானிய ரெனக் கொண்ட வரையும் தவற் றிற் செலுத்துகின்றனர் சிலர். இந் நூற் காப்பில், இதனாலுணர்த்தப் பெறுவது சிவாந்நத அநுபவம் என்ற தொன்றே போதிய சான்றா யினும், சிறிது விரித்து எழுது கின்றோம்.

துகளறுபோதம் என்பது குற்ற மற்ற ஞானம் என்ற பொருளைக் கொண்டது. துகள் என்பது ஈண்டு ஆன்மாவின்கண் உண்டாய குற் றம். 'சுருதிகள் பலநல முதல் கலை துகள் அறுவகை பயில் வொடு (திருஞானசம்பந்தர் திருச் சிவபுரம் - 6) என்று கலைபயில் வால் துகளறுதல் கூறப்பட்டது. 'துகள் ஏதும் இல்லானை எம் மானை என்மனத்தே வைத் தேனே' என்று (அப்பர் - திருக் கச்சியேகம்பம் - 7) முதல்வனுக் குத் துகளின்மையும் ஆன்மாவிற் குத் துகளுண்மையும் முறையே கூறியுங் குறித்தும் நிறுத்தப்பட் டன. "தூக்கிமுன் செய்த பொய் அறத்துகள் அறுத்து எழுதரு சுடர்ச்சோதி யாக்கி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயம் கண் டாமே" என்னுந் திருவாசகத்தால், ஆன்மாவிற்குத்துகள் இருந்து அறுக்கப்பட்ட உண்மை உணர்த் தப்பட்டது. ஆன்மாவின்கண் உள் ளதுகள் என்பது, மலம் நீங்கும் பருவத்தையுற்று, மெய்யு ணர்விற் பயிலுங்கால், அவ்வான்ம போதம் துகளறாத நிலை யதாய் ஐயம் திரிபு நீங்காதிருத்தலின், அத் துகளறு மாறு முடிந்த முடிபான

குருபதேசம் எய்துமாயின், அதனைத் **'துகளறு போதம்'** என்று கொள்வர் உண்மை ஞானத்தார். அத்துகளறு போதத்தை உணர்த்துவதால் இந் நூலுக்கும் அப்பெயர் எய்திற்று. துகள் என்பதன் மரூஉவே, தூள் என்பது, போதத்திற் படிந்ததுள் அறுவதே துகளறு போதம் ஆம்.

**'மூன்றுதிறத் தனுக்கள்செயுங் கன்மங் கட்கு**
**முன்னிலையா மூவிரண்டாம் அத்து வாவின்**
**ஆன்றமுறை அவைஅருத்தி மலமுதிர் வித்து**
**அரும்பருவம் அடைதலுமே ஆசான் ஆகித்**
**தோன்றிநுக ராதவகை முற்செய் கன்மத்**
**துகளறுத்து அங்கு அத்து -**
**-வாத் துடக்கறவே சோதித்து**
**ஏன்றவுடற் கன்மம் அநு பவத்தி**
**- னால், அறுத்து இங்கு**
**இனிச்செய் கன்மம் மூலமலம் ஞானத்தால் இடிப்பன்'**

என்னுஞ் சித்தியாருள் **'கன்மத் துகள் என்றதும் ஈங்கு உணரத் தக்கது.'** துகளறு (சங்கற்ப விகற்பங்களெல்லாந் தோயாத)அறிவு என்றார் தாயுமானாரும்.

இத் துகளறு போதத்தையும் உண்மைநெறி விளக்கத்தையும் சமன் வயம் செய்துணர்த்திய பெரியார் அவ்வுண்மை நெறி விளக்கத்தின் உரையில் எழுதியதனை இங்கறிதல் அத்தியாவசியமானது.

**'துகளறுபோதம் முப்பதவதரமும் உண்மைநெறி விளக்கம் ஆறு பாட்டினும் தசகாரியமாய் அடங்கிவருவதற்கு வகை! என்று குறித்து, பூதப் பழிப்புமுதல் சகல தரிசனம் முடியுமளவும் உள்ள ஏழும் முதற்பாட்டில் அடங்கி வருவது காண்க'** என்றார் கேவலம் முதல் பரமாநந்த யோகம் முடியவுள்ள இருபதும் இரண்டாம் பாட்டில் அடங்குவதறிக என்றார். அதனிலேயே சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம் மூன்றும் அடங்கும் என்றும் எழுதினார். ஆறாம் பாட்டில், பரமாநந்த போகம், பரமாநந்த மேலீடு, பரமாநந்த அவசரம் மூன்றும் அடங்கும் என்றார். **'இங்ஙனங் கூறும் ஆறுபாட்டிலும் பாசவவதரம் ஏழும் பசுவவதரம் பதினைந்தும் பதியவதரம் எட்டும் ஆம் முப்பதவரத்தையும் தசகாரியமாக அடக்கிக் கூறியது காண்க.'** என்று முடிவிலுரைத்தார்.

'தற்காண்டல் சாக்கிரமாம் தற்ப -
- ரையே சொற்பனமாம்
தற்காணா வெற்றவெறுந் தற்ப -
- ரையே - நற்கழுத்தி
ஞானாந் தத்துரியம் ஞானசுகா
தீதத்தே
தானாகா வுண்மை அதீ தம'
(சிவாநந்தமாலை - 36)

என்றும்,

'பாயிருள் நீங்கி ஞானந் தனைக்
காண்டல் ஆன்ம ரூபம்'

என்றும் வரும் வசனப்படி,

1. ஞானதரிசனமாம் சாக்கிரத்தில் பதின்மூன்றும் (13)
2. பரைதரிசனமாம் சொப்பனத்தில் நாலும் (4)
3. சுத்தபரா யோகமாம் சுழுத்தியில் நாலும் (4)
4. பரமாநந்த போகமாந் துரியத்தில் ஆறும் (6)
5. பரமாநந்த போகமாந் துரியாதீதத்தில் மூன்றும் (3)

ஆக அஞ்சவத்தையிலும் அடங்கி வருவது காண்க என்று முடித்துவிட்டார்.

இவ்வா றெழுதியவற்றை நன்குணராதார் ஒருவர் தசகாரியமே முப்பதவதரமாகக் காட்டப் பெற்றன என்று எழுதியிருக்கின்றார். ஒருவர் அதனை ஆதரித்து, உண்மையை மறுத்து ஒரு மூலையில் தாம் பெற்ற இடத்தில் இரகசியமாக எழுதியுள்ளார். இவ்விருவரும் குருவழியாகச் சைவ சித்தாந்தங் கற்றவரல்லராதலின், அவர்க்கு இது குற்றமுமாகாது ஆகாதேனும், உண்மையை உணர்ந்து கொள்ளாது ஒழிந்தது மன்றி, குருவழி அறிந்து எழுதிய உண்மையை மறுத்தது குற்றம் அன்றோ?

உண்மைநெறி விளக்கத்தின் உரையாசிரியர் "முப்பதவதாரத்தையும் தசகாரியமாக அடக்கிக் கூறியது', அவதரமுப்பதும் அஞ்சவத்தையிலும் அஞ்சவதரமாய் அடங்கி வருவது என்றதால் அஞ்சவத்தையின் விரிவும் தசகாரியத்தின் விரிவும் ஆகிய இரண்டுமே துகளறுபோதம் என்று கொள்ளல் ஏற்றாதறமோ?

ஞான தரிசனமாம் சாக்கிரம் என்றது ஒன்றே இவ்விருவர் போலிக் கருத்தை வெளிப்படுத்துமே. கேவலாவத்தையும் சகலாவத்தையும் நீங்கி நின்ற சுத்தாவத்தையில், ஞான தரிசனத்தில் தொடங்குவது இத் துகளறு போதத்திற்குரிய சாக்கிரம் என்றால், இவர்கட்கும் இதன்

உண்மையாராய்ச்சிக்கும் வெகு தூரம் உண்டு எனக் கூறலும் வேண்டுமோ? **'துகளறுபோதக் கட்டளை'** என்னு நூலின் முதற் கண் உள்ள பகுதியை ஒருமுறை யேனும் கற்றுணர்ந்தவர் தசகாரி யத்தின் விரிவே துகளறுபோதத் துட் கூறும் முப்பதவரமும் என்று கூறியொழிவரோ? **'அதிதீவிர மாகிய நாலாம் சத்திநிபாதம் பிறந்த ஆத்மாவைத் தேர்ந்த ஆசாரியன்'** ... அவனது அறிவு உடன்படத்துகள் அறுத்து இசை விக்கப் பொருந்தின முறைமை யைச் சொல்லுங் காரணத்தால் இந் நூலிற்குத் **'துகளறுபோதக் கட்டளை'** எனப் பெயராயிற்று. தசகாரியத்தின் தொடக்கம் அதிதீ விரமாகிய நாலாம் சத்திநிபாதத் தில் ஆமோ?அன்றியும், **'ஆணவ மலத்தையும், புண்ணியபாவ வலி களையும் தநுகரண புவன போகங் களையும், மகாமாயையையும், திரோ தாயியையும் உனக்கு நாம் அறி விக்க நீ அவற்றை அறிந்து பஞ்ச மலங்களையும் பதினெட்ட வத்தை களையும் விட்டு நீங்கி, கர்த்தாவின் செயல் ஒழிந்து உன் செயல் இல்லை எனக்கண்டு, அகண்ட பரி பூரணமான பரமானந்த சொருபத் திலே நிறைந்து நின்று அநுப விப்பாயாக'** என்று துகளறு போதத் தொடக்கத்துக்கு உரிய தாகக் கூறிய இது தசகாரியத் தொடக் கத்துக்கு எய்துமோ?

'உற்ற சரியை, ஒழியாத நற் கிரியை, குற்றமிலா யோகக் குறி நெறியும் முற்றிப் பிறந்தார்கள் தாம் அறியப் பேசும்' துகளறு போதம் துகள் அறும், அறுகின்ற அற்ற போதமே யாகாது (அவ் வாறு பிறவாதார்க்குரிய தச) காரி யமாகுமோ? போதம் - ஞானம் காரியம் - கிரியை போதம் காரிய மாதல் பொருந்துமோ?

பூதப்பழிப்பு முதலிய தலைப் புகளையும், கேவலம் கேவல தரிசனம் கேவலாதீதம் தத்துவா தீதம் சகலதரிசனம் முத்தி சாக் கிரம் சாக்கிராதீதம் சுகாதீதம் முத லிய தலைப்புகளையு முணர்ந்தா லேயே தசகாரியம் வேறு துகளறு போதம் வேறு என்று நன்கு விளங்கும். காரணாவத்தை மூன்ற னுள் சுத்தாவத்தையின்கண் நிக ழும் தசகாரியமும், அத் தசகாரி யத்துள் சிவதரிசனம் சிவபோகத் தில் தொடங்கித் திகழும் துகளறு போதமும் வெவ்வேறாதலை யுணர்ந்து தானே, உண்மைநெறி விளக்கத்தின் உரையாளர் ஒருவர் முப்பதவ தரத்தையும் மூன்று

பாட்டிலும் அவற்றிற் சொல்லிய தசகாரியத்திலும் அஞ்சவத்தையிலும் அடங்குமாறுணர்த்தினார். தசகாரியத்துள் அடங்காதன எவையேனும் உளவோ? நிலை வேறுபாட்டின் நுட்பத்தினால் வகைப்படும் உண்மை உணரும் மதுகையில்லார்க்கு எல்லாம் ஒன்றேயாம். தசகாரியம் சுத்தாவத்தையின் நிகழ்ச்சியா யிற்றே!

துகளறு போதத்தில் இருபத்திரண்டாவதாகச் சுத்தாவத்தை நிற்கின்றதே! இரண்டும் ஒன்றெனக் கொள்ளல் அறிவின் பாற்படுமோ? முத்திச் சகலம், பெத்தச் சகலம், அருட்கேவலம் மருட்கேவலம், முத்திசாக்கிரம், சாக்கிராதீதம், பரையதீதம், சிவபூமி, சுகாதீதம், பரமசுகம் ஆகியவற்றைத் தசகாரியத்தால் அறியவல்லார் உளரோ? தசகாரியமும் துகளறு போதத்தரமும் சன்மார்க்கம் என்ற ஒன்றில் அடங்குவதால் எல்லாம் சன்மார்க்கத்தின் விரிவே என்று எளிதில் உரைப்பதைவிட்டுத் தசகாரியத்தின் விரிவென்பது மிகையன்றோ?

ஞானபூசை ஐந்து என்றும், ஞானம் நான்கு என்றும், உண்மை ஞானம் ஒன்றே தசகாரியமாம் என்றும், தசகாரியத்துள் சிவதரிசனத்தின் முடிவிற் றொடங்கி முற்றுவது துகளறு போதம் என்றும் ஞானஉபதேசம் பரம்பரையின் எய்தும் உண்மையை இப்போலிச் சைவசித்தாந்தி உணர்வதற்கு இன்னும் எத்தனையோ காலம் செல்லும் தாயுமானவர் எந்தநாட்கண்ணியுள் இத் துகளறுபோதத்தை விளக்கியருளியவற்றை இவர் அறியும் நான் எந்நாளோ?

திருவாவடுதுறையின் புதுப் பதிப்பின்கண் ஆறுபக்கத்திலுள்ள ஐந்து பாக்களையும் ஒருங்குணர்ந்தார் இத் துகளறு போதத்தின் உண்மையைப் பற்றி கருத்து வேறுபாட்டை அறிவர். நூறு பாட்டுள்ள துகளறு போதத்தின் முடிவிற் கொடிக்கவியொன்று சேர்ந்து நூற் றொண்றாகியதும்.

> 'சாக்கிரம் பத்தொன் பதுகனவு
> தானொன்று
> தூக்குசுழி ஒன்று தூரியம் எட்டு
> - நீங்கித்
> தூரியாதீ தம்ஒன்று சுத்தவத்தை
> முப்பான்
> சரியத் துகளறுபோ தம்'

என்பதும்

> 'சாக்கிரம்தான் ஈராறு சார்சொப்
> பனம்ஆறு
> நீக்கும் சுழுத்தியொன்று நேர்தூரி
> யம் - நோக்கி

**ஒருமுன் றதீதம்தான் ஓராறும் நாலேழ்**
**தருமே துகளறுபோ தம்'**

என்பதும் வேறுடுவதும், இவற்றுள் பின்னதே

**'திருவருள் விளையுந் திறம்பல எனினும்**
**ஒருவகை இருபத் தெட்டு'**

என்றதொடும்,

**'தான்எழு நான்கென்ச் சாற் றிய பின்னர்'**

என்றதொடும் ஒத்து உண்மையுணர்த்திற்று என்பதும் உணர்வது அறிவர் கடனாகும். விரிவஞ்சி இக்கட்டுரை இவ்வளவில் நிறுத்தப்பட்டது.

**நன்றி**
**சித்தாந்தக்கட்டுரைகள்**
**கொள்கை.**

---

தன்நிறமும் பல்நிறமும் தானாம்கல் தன்மைதரும்
பொன்நிறம்போல் மன்நிறம் இப் பூ.

புன்செயலின் ஓடும் புலன்செயல்போல் நின்செயலை
மன்செயல (து) ஆக மதி.

---

# சைவசித்தாந்தத்தின் பரிணாம வளர்ச்சி

## திருமூலர் முதல் வள்ளலார் வரை

மு. பெ. சத்தியவேல் முருகனார்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஒரு மொழியின் இலக்கணத்தில் எழுத்தையும், சொல்லையும் சொற்கள் புணர்வதற்கு விதி களையும் பார்க்கலாம். இதுதான் எல்லா மொழி இலக்கணங்களி லும் காணப்படும் பொது நியதி. ஒன்றை மொழி இலக்கணத்தில் வைத்து காட்டி, நிலத்தை நான் காகப் பகுத்து நான்கிற்கும் நால் வேறு தெய்வங்களை வகுத்துக் கூறுகிறது. அதோடு,

"வழிபடு தெய்வம் நிற்புறங் காட்டப்
பழிநீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே"

என்றும்,

"கொடிநிலை, கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொரு கண்ணிய வருமே"

என்றும் கடவுளைப் பற்றிய சிந் தனையையும் முன் வைக்கிறது. இது போல் வேறு எந்த மொழி யின் இலக்கணத்திலும் காணப் படாத ஒரு வியக்கத்தக்க விஷ யம். இன்று தமிழ்ப்பற்றாளர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்டே கடவுள் இல்லை என்று கூறுவதை நாகரிகமாக மேற்கொள்வோர் இதைக் கவனிக்க வேண்டும். இவர்கள் இந்த தமிழிலக்கண பகுப்புகளையும் அதில் கூறப் படும் கடவுள் சிந்தனைகளை யும் தமக்கு சௌகரியமாக மறைத்து (அ) மறந்து தமிழ்! தமிழ்! என்று கூக்குறலிடுவது வேடிக்கை! தமி ழனுக்கு தமிழிலக்கணத்திலேயே கடவுள் சிந்தனை, அதிலும் சைவசித்தாந்த சீரிய சிந்தனை உணர்த்தப்படுகிறது.

இன்று பேரறிஞர்களை டாக்டர் என்று பட்டம் கொடுத்துப் பாராட்டி அப்பெயரால் அழைக்கி றோம். டாக்டர் என்பதை தமிழில்

முனைவர் என்று மொழிபெயர்த்து வழங்கி வருகிறார்கள். இந்த உலகின் முதல் டாக்டர் யார் தெரியுமா? இறைவன்தான். இறைவனா? அவன் என்ன ஆய்வுக் கட்டுரை வழங்கினான்? என்று கேட்கலாம். ஆய்வுக் கட்டுரைகளில் பொதுவாக மேற்கோள் நூலகராதி (Biblio -graphy) எழுதுவார்கள். அப்படி வந்த மேற்கோள் நூலையும் காட்ட அவசியமின்றித் தானே முதனூலாக இவ்வுலகிற்கு அளித்து டாக்டர் பட்டம் பெற்றவன் இறைவன் என்று கூறுகிறது தொல்காப்பியம்.

> **"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**
> **முனைவன் கண்டது முதனூலாகும்."**

இறைவனைத் தொல்காப்பியர் முனைவன் - அதாவது டாக்டர் என் றார். அது முதனூலானதால் இறைவன் முதல் டாக்டராயினான்.

இங்ஙனம் தமிழிலக்கணத்தில் இறைவன், உயிர், உடல் ஆகிய பதி, பசு, பாசம் ஆகிய சைவ சித்தாந்தத்தின் முப்பொருளுண்மையும் காண்கிறோம். தொல்காப்பியர் இறைவனைக் கூறுவது மட்டுமன்றி இறைவனை அடையும் நெறிகளில் ஒன்றான யோகம் பற்றியும் கூறுகிறார். நாலிரு வழக்கதில் தாபதபக்கமும், என்று யோகம் செய்வதற்கு உரிய எட்டு நிலைகளையும் அதாவது தக்கன, தகாதன, இருக்கை, வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, உள்ளுதல், இன்ப நிலை என்ற எட்டு யோக உறுப்புக்களைக் கூறுகிறார். எனவே தொல்காப்பியர்க்கு பல நூற்றாண்டுகட்கு முன்னே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சித்தாந்தப் படிமுறை நான்கில் யோகத்தை முன்னோர்கள் பயின்றனர் எனத் தெரிகிறது. யோகம் கூறப்பட்டதால் உபலக்கணத்தால் பிறவற்றையும் பெறலாம். ஆனால் ஞானநெறி அப்போது முளை நிலையிலேயே இருந்தது என்பதை சங்க நூல்களால் அறிகின்றோம். அவற்றை விரிக்கின் பெருகும்.

அதன் பின் வந்த திருவள்ளுவர் யாத்தளித்த திருக்குறளிலும் சைவசித்தாந்தக் கருத்துக்களே முதலிடம் பெறுகின்றன. இதனைத் "திருக்குறள் ஓர் சைவ

சித்தாந்த நூலே" என்ற மதுரை திருவருள் தவநெறி மன்ற வெளி யீடான நூலில் சைவசித்தாந்தம் பெரியார், வஜ்ஜிரவேலு அவர் கள் நன்கெடுத்து நாட்டியுள்ளார். இதையொட்டி திருவள்ளுவர் மும்மணிக்கோவை என்ற நூலும் எழுந்தது. திருக்குறளில் இருள், வினை, உடம்பு, உயிர், கடவுள் என்று யாவும் பேசப்படுகின்றன. இருள் ஆணவ மலத்தையும், வினை கன்ம மலத்தையும், உடம்பு மாயா மலத்தையும் குறிக் கின்றது. அத்துடன் உயிரையும் கடவுளையும் உண்டென்பார் வள் ளுவர். கடவுளின் எண்குணங் களைப் பற்றி சைவசித்தாந்தப் படி கூறுவார். இன்னும் சொல்லப் போனால் முதல் குறளில் ஆதி பகவன் எனக் குறிப்பிட்டது அம்மையப் பனையே. ஆதி பகவன் என்பது ஆதியாகிய சக்தியை பாகமாகக் கொண்ட இறைவன் என்று பொருள் தரும். அதிலும் முறையாக அருள் காட்டக் காணும் முறையில் ஆதி யாகிய அருளை முதலில் வைத்து அடுத்து பகவனாகிய இறை வனைக் கூறி அம்மையப்பர் வாழ்த்தாக ஆரம்பிக்கிறார். பாயிரத்தில் முதலில் கடவுள் வாழ்த்தாக அப்பனை வணங்கி யவர், அவனது கருணையின் கூறாகிய வான் மழைக்கு அடுத்த அதிகாரம் வைத்து, அவனது கருணையின் அருளைப் போற்று முகத்தான் அம்மை ..ய வணங்கு கிறார் வள்ளுவர். அதன்பின் அடியார்களாகிய உலகப் பற்றற்ற வர்களைப் பாசங்களிலிருந்து விடுபட்டவர்கள் என்ற பொருளில் நீத்தார் வழிபாடு அமைத்து, இதற்கு அடிப்படை அறமே என்ற அறத்தை வலியுறுத்தியதே திருக் குறள் பாயிர அமைப்பு. இன்னும் சான்றுகளுடன் பல சொல்லலாம். நேர நெருக்கடி கண்ணைச் சிமிட் டுகிறது. சரி மேலே போவோம்.

தொல்காப்பியர்க்குப் பின், திருவள்ளுவர்க்குப் பின் அந்நெறி யில் வந்த தமிழ்ச் சான்றோர் களின் வரிசைப்பட்டியலைப் பார்ப்போமானால் நெடுமூச்சு ஒன்று பிறக்கிறது. அவர்கள் அனைவராலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் சீரியவளம் பெற்று வளர்ந்து வந்திருக்கின்றன.

இங்கே நிகழ்ச்சித் தலைப்பில் அந்தச் சான்றோர் வரிசை

காரைக்காலம்மையாரிலிருந்து தொடங்குகிறது. உண்மையில் அது மாணிக்கவாசகரிடமிருந்து தொடங்க வேண்டும் என்பது என் கருத்து. காரணம் மணிவாசகர் மூவர் முதலிகட்கு முற்பட்டவர். மணிவாசகர் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பதற்கு அசைக்க முடியாத ஆதாரங்களைக் காட்டியவர். இந்த மன்றத்தைத் தோற்றுவித்த பெரியார்களில் ஒருவரான மறைமலையடிகள் அவர் மட்டுமல்ல, திரு. கா. சு. பிள்ளை, திருமலைக் கொழுந்துபிள்ளை, திருவாசகம் முழுமைக்கும் அரிய அநுபவம் பேருரை எழுதி வழங்கிய ஈழத்துப் பண்டிதமணி நவநீதகிருஷ்ண பாரதியார், கதிர்மணி விளக்கம் தந்த பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், ஞானியார் சுவாமிகள் அண்மையில் வாழ்ந்து சிவாத்து விதமடைந்த வாரியார் சுவாமிகள், இந்த மன்ற இதழான 'சித்தாந்தத்தின் ஆசிரியரும் எம்பால் பேரன்பு பூண்ட கற்றார் களித்தேத்தும் பேராசிரியர் வை. இரத்தினசபாபதி ஆகியோர் கருத்தும் மணிவாசகர் 3 - ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பது தான்.

இப்போது இவரின் கால ஆராய்ச்சியில் கடுகி நுழைந்து காலத்தை வீணாக்க அடியேன் விரும்பவில்லை. இதனைத் தனியே ஒரு ஆய்வுச் சொற்பொழிவாகக் கொள்ள இந்த மன்றம் அநுமதிக்குமானால் அதனைத் தனியே அழைத்து அப்போது எடுத்த கருத்தை முட்டின்றி முடித்துக்காட்ட இறைவன் திருவருள் கூட்டுவான் என நினைக்கிறேன். இப்போதைக்கு இந்த மன்றத்தைத் தோற்றிய தலைவர் மறைமலை அடிகளார் முதல் இந்த மன்றத்தினுடைய இதழின் இந்நாள் ஆசிரியர் வரை இந்த மன்றம் ஏற்கும் கருத்துப்படி கால அடைவில் காரைக்காலம்மையாருக்கு முன்னதாக மணிவாசகரை முதலில் எடுத்துக் கொள்வோம்.

தொல்காப்பியர், வள்ளுவர் உள்ளிட்ட பண்டைத் தமிழர்கள் வகுத்துச் சென்ற சைவசித்தாந்தக் கருத்துக்கள் மாணிக்கவாசகர் காலத்தில் மேலும் வளர்ந்தெழுந்து நின்றது. சைவசித்தாந்தத்தில் சரியை நெறிக்கு அப்பரையும், ஞானநெறிக்கு மாணிக்க

வாசகரையும் கூறுவர். சரியை நெறி அடிமை நெறி ; கிரியை நெறி - மகன்மை நெறி ; யோக நெறி தோழமை நெறி ; ஞான நெறி - தலைவன் தலைவி தலைக்கூடும் நெறி.

**"பெற்ற சிற்றின்பமே பேரின்பமா யங்கே முற்றவரும் பரிசு உந்தீபற"**

என்று சித்தாந்த சாத்திர நூலான திருவுந்தியார் கூறுவது பழந்தமிழர் நெறி. இதில் பெற்ற சிற்றின்பத்தைப் பேரின்பமாக்கும் கலைமை நெறிப்பட வகுத்ததே அகத்துறை. இறைவனே இதன் அடிப்படையில் **"இறையனார் அகப்பொருள்"** என்ற நூலினை எழுதினான். எனவே தான் முன்னர் தொல்காப்பியர் முதல் வள்ளுவர் வரை யோகம் பரக்கப் பேசப் பட்டு இருந்தாலும், ஞானநெறி முளைதான் விட்டிருந்தது, அது தன் விளக்கத்தை அடைந்தது மணிவாசகரால் தான். இதுவே சைவசித்தாந்தம் வளர்ந்த கால அடைவை சரிவரக் காட்டுகிறது.

மாணிக்கவாசகர் பாடிய பதிகங்கள் ஒவ்வொன்றும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை அடிப் படையாகக் கொண்டவை என் பதை **"திருவாசக உண்மை"** என்ற நூல் கூறுகிறது. உதார ணத்திற்கு எல்லோரும் அறிந்த திருவெம்பாவையையும், திருப் பள்ளி யெழுச்சியையும் எடுத்துக் கொள்வோமானால் திருவெம் பாவையின் கருத்து இது என்று அந்நூல் தெரிவிக்கிறது. அதாவது

**"மலவிருளுற் றுறங்காமல் மன்னுபரி பாதரருள்
செலமுழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை"**

இது மலபரிபாகமும் சத்திநிபாத மும் கூறியது. திருப்பள்ளி யெழுச்சி பற்றி பாடும் போது,

**"ஏர்மருவு திருப்பள்ளியெழுச்சி பணிவிடை கேட்டு
ஆர்வமுடன் ஆண்ட அரற்கு அன்பு செயு மியல்பே"**

சத்திநிபாதம் நிகழ்ந்தபின் ஆண் டவனுடன் தலைக்கூடி நிற் கையில் அவன் பணியாற்றி வேறு செய்யாமையும், அப்பணியிலும் அன்பே பெருக்கி நிற்க வேண்டும் என்று **"ஏகனாகி இறைபணி நிற்க"** என்ற 10 - ஆம் சூத்திரப் பொரு

ளையும், "அயரா அன்பின் அரன் கழல் செலுமே" என்ற 11 - ஆம் சூத்திரப் பொருளையும் இது ஒருங்கே கூறுகிறது.

திருவாசகத்தில் இது போல் எல்லாப் பதிகங்களுக்கும் சைவ சித்தாந்த உண்மை தெரிவித்து எழுதியது தான் 'திருவாசக உண்மை' என்ற நூல்.

தலைவனுடன் கூடிப் பின் பிரிந்த தலைவியின் ஆற்றாமை யால் அழுது அழுது அரற்றிப் பாடியது தான் திருவாசகம் என் பார் நவநீத கிருஷ்ண பாரதியார். இது கண்ட அன்பின் ஐந்திணை யில் பாலைத் திணையை மட்டும் பாடிய மாணிக்கவாசகரை அன் பின் ஐந்திணையையும் ஒருங்கே பாடச் சொல்லிக் கேட்க, இறை வன் விரும்பியதே திருக் கோவை யாராக மலர்ந்தது. இதனால் ஞானநெறி முற்றும் விளங்கியது. இதனைத் திருக்கோவையார்க்கு கொடுக்கப்பட்ட கொளுக் கண்ணி களால் அறியலாம். அவை ஒவ் வொரு அகத்துறையையும் ஆண் டவன் துறையாகக் காட்டும் அழ கும் நலமும் கற்பார்க்கு கழிபேரு வகை பயப்பன.

(தொடரும்)

நன்றி

சைவசித்தாந்தத்தின் பரிணாம வளர்ச்சி

---

ஆ (சு) இல்நவா நாப்பண் அடையாது அருளினால்
வாசிஇடை நிற்கைவழக்கு.

எல்லா வகையும் இயம்பும் இவண அகன்று
நில்லா வகையை நினைந்து

---

# சைவசித்தாந்தத்தின் பொருள் பொதிந்த சங்கப் பாடல்

சிவ. சண்முகவடிவேல்

புறநானூறு என்னும் பொன்னேடு சங்கப் பாடல்கள் தொகுப்பு நூல்கள் எட்டனுள் அடங்கும். புறம் + நானூறு = புறநானூறு என்றாயிற்று. அகத்திற்குப் புறம்பான நானூறு பாடல்கள் கொண்டதால் புறநானூறு என்னும் பெயரைப் பெற்றது.

சங்க காலத் தங்கமான புறநானூற்றுப் பாடலில் நூற்றித் தொண்ணூற்றிரண்டாம் பாடல் கணியன் பூங்குன்றனார் என்னும் புலவரால் இயற்றப்பெற்றது. சங்க காலத்துப் புலவரானதனால் கணியன் பூங்குன்றனார் பொய்யடிமையில்லாத புலவர் என்பது போதரும்.

அப் பாடல் **"யாதுமூரே யாவருங் கேளிர்"** என்று எடுத்துத் தொடுக்கப்பட்டது. அடுக்காகப் பதின்மூன்று வரிகளால் மிடுக்காக அமைந்தது.

> **"பெரியோரை வியத்தலு மிலமே**
> **சிறியோரை யிகழ்த லதனி னு**
> **மிலமே"**

என்னும் ஈற்றடிகள் செய்யுளை நிறைவு செய்யும்.

பதின்மூன்று வரிகளில் ஐம்பத்தோர் சீர்கள் செய்யுகளுக்கு மெருகு ஊட்டுவன. அந்நாளில் ஐம்பத்தோர் எழுத்துக்களால் தமிழ் நடந்த உண்மை ஓர்ந்து இன்புற்றபாலது.

ஐம்பத்தொரு எழுத்துக்களால் தமிழ் இயங்கியதைத் திருமந்திரம், **"ஆறிரா பத்துநா லஞ்செழுத்து"** என்று தெளிவு படுத்தும். இன்னும்,

> **ஐம்ப தெழுத்தே அனைத்**
> **தும்வே தங்களும்**
> **ஐம்ப தெழுத்தே அனைத்தாக**
> **மங்களும் - (965)**

என்பதனாலும் காண்க.

அந்தப் பதின்மூன்று வரிகளில், **'சைவசித்தாந்தம்'** சொல்ல முனைந்தது எதுவோ அதனையே புறநானூற்றுப் பாடலும் புலப்படுத்துகின்றது. சைவசித்தாந்தத்தின் உயிர்நாடிப்

"முப்பொருள்" உண்மை. முப்பொருளாவன பதி, பசு, பாசம் என்பன.

பதிப்பொருள் ஒன்றே எஞ்ஞான்றும் அழிவில் உள்பொருள். பசு பதியோடு அத்துவிதமாகும். பதியையும் பசுவையும் ஒரு பொருளாக விடாமல் இடையே பிரித்து நிற்பது பாசம். பாசம் அற்ற வழி சீவன் சிவனாயிடும். அந்த ஒரு சுழிப்புச் சிவனைச் சீவனாக்கும். சுழிப்புப் பாவ புண்ணியம் ஆகிய இருவினை.

"ஆருயிர் முறைவழிப் படூஉம்" என்பதனால் பசு உண்மையும், ஆன்மாவின் இருவினையும் தெளியப்படும். இருவினையும் அதனைப் பற்றிய ஆசையுமே. பிறவிக்கும் உலக ஓட்டத்திற்கும் ஆட்டத்திற்கும் மூலவித்து.

உயிர் தனியாக இயங்க மாட்டாது. உயிரின் இயக்கத்திற்கு உடம்பு வேண்டும். உயிரை இயக்கவும் ஓர் உயிர்ப்பு உள் நின்று இயக்கல் இன்றியமையாது வேண்டப்படும்.

ஆருயிர் முறைவழிப்பட்டு இருவினை நுகர்ச்சிக்கு உணர்வு சூழ் கடந்த ஓர் உணர்வாகத் தொழிலாற்றுவது பதிப்பொருளாகும்.

இன்னும் பதிப்பொருள் உண்மையைச் **"சாதலும் புதுவ தன்றே"** என்னும் பொருள் சொல் புலப்படுத்தும்.

மனிதப் பிறவியின் மாண் பயன் பிறவியை ஒழித்துப் பிறவாமையை எய்தி ஆன்மா சிவபிரானுடைய திருவடி நிழலின் கீழாக துன்பற்ற இன்பத்தை என்றும் எஞ்ஞான்றும் சுகித்திருத்தலாகும்.

அதிலும் இந்த மானிட உடம் போடு இறை இன்பத்தில் அழுந்திக் கிடத்தல் உன்னதமாகும். உடம்போடு உயிர் சிவபெருமான் திருவடி நீழலை எய்தும் உண்மையைப் பெரியபுராணத்தில் காணலாம்.

**"....................மறைச் சிறுவர்**
**அந்த வுடம்பு தன்னுடனே யரனார் மகனா ராயினார்"**

என்று சண்டேசுர நாயனார் புராணத்தினாலும்,

**"இந்நின்ற நிலையேரும் பாலணைவா யெனவவரும்**
**அந்நின்ற நிலைபெயர்பா ரையர்திரு மருங்கணைந்தார்"**

என்று ஆனாயநாயனார் புராணத்திலும்,

'வாய்ந்தமனம் போலுடம்பும்
வடகயிலை மலைசேர்ந்தார்'

என்று காரிநாயனார் புராணத்தி லும் கட்டுரைக்கப் பெறுவதனால் கண்டு கொள்ளலாம்.

அது தவறிய வழி இரண்டா வது படிக்கிரமமாக உடம்பை விடுத்தாவது உயிர் வீட்டின்பம் உறுவது உறுதி.

அதுவும் எய்தவிடத்துச் சாதல் நிகழும். சாதல் வழி இரு வினைப் பயன் துய்க்கும் பொருட்டுப் பிறப்பு நிகழும். பிறப் பிற்கு பிறப்புமாக மாறி மாறி உயிர் முடிவற்ற தொடர்கதையில் மூழ்கும். அதனால் தான் "சாத லும் புதுவ தன்றே" என்றார்.

சாதல் புதுக்கதை அல்ல பழங்கதை என்ற உண்மையைத் திருநாவுக்கரசு நாயனார்,

"பெயர்த்துஞ் செத்துப் பிறப் பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே என்று புளித்துப் போன கதை என்னும் பொருளில் வைத் துப் பாடியுள்ளார்.

பிறப்பும் இறப்பும் தொடர் கதையாவது பிறவாமைப் பேறு எய்தப் பிறவாமையால், பிறவா மைப் பேறு எய்தின் உயிர் சிவ பிரான் திருவடி நீழலில் இளைப் பாற்றல் எய்தும். இளைப்பாற்றல் உயிர் எய்தாமைக்கு வினை போகம் விளைச்சல் நிலம் ஆகின் றது. கடவுள், உயிர், தளை என் னும் முப்பொருள் உண்மையைச்

'சாதலும் புதுவ தன்றே'

என்னும் சொற்றொடர் உணர்த்தி நிற்பது உன்னி இன்புறல் பாலது.

பதி, பசு, பாசம் அனாதி யானது என்னு உண்மையைத் திருமந்திரப் பாடல் (115) தெளிவு படுத்துகின்றது.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா'

என்பதனால் அவரவர்தாம் செய்த வினையை அவரவரே அனுபவித்தாக வேண்டும். 'அழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்" என்பது போல அவரவர் ஈட்டிக்கொண்ட தீவின் நல்வினைக்கான இன்ப துன்ப அனுபவத்திற்குத் தாம்தாமே தலை யாரி ஆவதன்றிப் பிறர் ஒருவர் பால் சுமத்தி விடலாகாது.

**'செய்த வினை இருக்கத் தெய் வத்தை நொந்தக் கால் எய்த வருமோ..'** என்பது ஔவை வாக்கு. இதனால் ஒருவர் செய் யாத நல்வினை தீவினைக்கான இன்ப துன்ப நுகர்ச்சி எச்சார் பாலும் அவரை வந்து எய்தாது என்ற உண்மையை ஓர்ந்து கொள்க.

இவ்வுண்மையை நன்கு உணர்ந்த முற்றிப் பழுத்த ஞான வான் தமக்குப் பிறரால் வரும் இன்ப துன்பங்களைக் கண்டு பிற ரைத் தூற்றவும் செய்யார் ஏற்ற வும் இசையார்.

இன்ப துன்பத்திற்கான பாவ புண்ணியம் தம்மைச் சார்ந்த தாதலின்,

**'நோதலும் தணிதலு மவற்றோ ரன்ன'** என்னும் சொற்றொடர் கற் றோரைக் களிப்புற வைக்கும்.

ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுவதால் உயிர்வாழ்க்கை நன்றாக அமைந்துள்ளது என்று மகிழ மாட்டார். அல்லது நலிதல் காரணமாக இல்வாழ்க்கை துன் பக்கேணி என்று துயருறவும் மாட்டார்.

வினைப்போக நுகர் வாழ்க்கை ஆதலின் வெறுப்பையும் விருப்பை யும் சரிசமநிலை நின்று ஒழுக லாறு உண்மையை,

**'...வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்**
**இன்னா தென்றலு மிலமே"**

என்றார் இப்பொருளிற்குப் பொருத்தமான மணிவாசகனார் மணி வாக்குக் காண்க.

**'எண்தோள் முக்கண் எம்மானே**
**நன்றே செய்வாய் பிழை செய்வாய்**
**நானோ இதற்கு நாயகமே...'**

மின்னலோடு மழை குளிர்ந்த துளியைப் பெய்கின்றது. அத னோடு அமையாது கல்லை அலைத்து ஒலிக்கும் வளம் மிக்க பேறாகப் பெருக்கெடுக்கின்றது.

எல்லா ஊர்களிலும் பிறக் கின்றோம். பிறந்த ஊர்களை எங்கள் ஊர் என்கிறோம். அந்த அந்த ஊர்களில் அந்த அந்த ஊர்களில் அந்த ஊரவர்களை எங்கள் உறவினர்கள் என்று உற வாடுகின்றோம். வாழுங்காலத் தில் கொஞ்சம் கொஞ்சமாக நாம் அறியாமல் சேகரிக்கப்பட்ட இரு வினை மலங்கள் வாழ்க்கையில் நெஞ்சக் கன கல்லை நிலை குலைக்கும் இன்ப பூங்குன்றனார் கட்டுரைக்கின்றார்.

'............. மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ
யானாது
கல்பொரு திரங்கு மல்லன் பேர்
யாற்று'

ஆற்று வெள்ளத்தில் இழு பட்டுச்செல்லும் மிதவைபோல இருவினை என்னும் ஆற்றுநீர் வெள்ளத்தில் ஆருயிர் மிதந்து வினைப் போகத்தை அனுப வித்துக்கொண்டிருக்கின்றது. மண் ணுலகில் பாய்ந்து முடிந்த பின்பு ஆற்றுநீர் கடல்கடந்து சங்கமிக் கின்றது. கடலில் சங்கமித்த ஆற்று வெள்ளம் ஆற்றுநீர் தன்மையை இழந்து கடல்நீர் ஆகிவிடுகின்றது.

அதே போல வினைப்போகம் முடிந்த வழி ஆருயிர் பசு ஞான மன்றிப் பதிஞானமாகி விடு கின்றது.

'நீர் வழிப் படூஉம் புனைபோ
லாருயிர்
முறைவழிப படூஉம் புனைபோ'

என்ற இந்த உண்மையை ஞான வான்கள் அருளிச் செய்த மெய் ஞான வேத ஆகம நூல் வாயி லாகத் தெளியப் பெற்றனம்.

'.... என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின்..'
என்றார்.

அவரவர் செய்து கொண்ட பாவபுண்ணியத்திற்கு எற்ப நன்மையால் மேம்பட்டவரைப் பார்த்து புகழவும் மாட்டோம். மாட்சிமை இன்மையால் தாழ்ந்த வரைப் பார்த்து அதற்கு எதிராக இகழ்தலைச் செய்யவும் இசை யோம்.

'.... மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு
மிலமே" என்று பாடினர்.

இதனால் ஆருயிர் எல்லாம் சிவனோடு ஒக்கும். ஆனால் பிறவிதோறும் உயிர்கள் உழைத் துக் கொண்டே பாவ புண்ணியங் களுக்கு அளவான துன்ப இன்பங் களை நுகருகின்றன. பெருமைக் குரியனவாகவும் சிறுமைக்குரிய னவாகவும் திகழுகின்றன. அவை யாவும் ஊழின் பிரகாரம் உருளு கின்றன. தாழ்த்து வதற்கோ வாழ்த்து வதற்கோ ஏதுமில.

இருவினையை அவன் அளந்து கொடுக்கின்றான். ஏற்றவன் மடுக்கின்றான். அந்த மாயையில் மயக்குறின் திறவோர் காட்சியிற் தெளிவின்மையாம்.

இவ்வாறான மானிட வாழ்க் கையின் அடிப்படை உண்மை களை ஆதாரமாகக் கொண்டு

எக்காலத்தும் எவ்வுலுகோர்க்கும் உண்மையை உபதேசிக்கும் சைவசித்தாந்த கோட்பாட்டு மூலத்தைத் தன்னகத் தடக்கிய தனித்துவமான புறநானூற்றுப் பாடல் இது:-

யாது மூரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே

---

ஏகன் அநேகன் இருள்கருமம் மாயைஇரண் (டு)
ஆகஇவை ஆ (று) ஆதி யில்

செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளனென் (று) உணர்.

---

# சேக்கிழார் விளக்கும் செம்பொருள்

(இளஞ்சைவப் புலவர் திரு. S. R. தேமொழி அவர்கள்)

தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானுக்குப் பலதிறச் சிறப்புக்கள் உண்டு. சேக்கிழார் பெருமானின் வாயிலாகவே நாம் நமது சைவ பரிபாடைச் சொற்களையும், சிறந்த சம்பிரதாய ஒழுக்கங்களையும் தெரிந்து கொள்ளப் பெறுகின்றோம். அது பற்றியே, சேக்கிழார் பெருமானை நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், ஞானாசிரியர் எனப் பலவகையிற் புகழ்ந்து,

நாடிய விரிநூல் சொற்றிடு திறனால் நன்னூல் ஆசிரியன்
நகுபா சுரம்முதல் உரைசெய் தலினால் நவிலுரை யாசிரியன்
நீடிய பாசம யக்குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனைசெய்
நிலையாற் போத காசிரி யன்இவை நிகழ்தொறும் நிகழ்தோறும்
ஆடிய ஞானத் திறன் உறலால்ஞானா சிரியனும்நீயென்று
ஆன்றோர் பலரும் புகழப் படுபவ அகிலம் எலாஞ்சென்று
கூடிய புகழ்சால் குன்றத் தூரன் கொட்டுக. சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி'

என்று பாராட்டிப் பரவிப் பெருங் கவிஞர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் பெருமகிழ்ச்சி உறுகின்றார். சேக்கிழார் திருமுறைகளை நன்கினிது பயின்று உணர்ந்தவர்களுள் தலை சிறந்தவர். திருமுறைகளின் சீரிய செம்பொருள்களை விளக்கும் செயலினும், சேக்கிழார் பெறலருந் திறன் பெற்றவர் இவ்வுண்மையினையும்,

'அவையகம் வியக்கும்முப் புலவர் அருள் முக்கனி
அருந் தமிழ்ச் சுவையனைத்தும்
ஆராய்ந் தெடுத்துப்பல் செய்யுள் முகமா
அறிய அறிவித்த பெருநாவலன்'

எனப் பெருங்கவிஞர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் மிக வியந்து போற்றி மகிழ்ந்தருளுகின்றார்.

சேக்கிழார் பெருமான் தெய்வம் மணக்கும் தமது பெரிய புராணத்தின் பல தேவாரத் திருப்பாடல்களுக்குத் திருவருள் உணர்வு கொண்டு, அரிய உரிய பொருள் விளக்கங்களைச் செய்த

ருளுகின்றார். தமது வாழ் நாள் முழுதும் பெரியபுராணத் தினைப் பயின்றும் பயிலுவித்தும் மகிழ்ந்த பெருமைசான்ற பெருங் கவிஞரே றாகிய மினாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள், அவற்றின் அருமை பெரு மைகளை எல்லாம் உணர்ந்து, 'நகுபாசுரம் முதல் உரைசெய்த லினால் நவில் உரையாசிரியரின்' எனவும், 'முப்புலவர் அருள் முக்கனி அருந்தமிழ்ச் சுவை அனைத்தும் ஆராய்ந்தெடுத்துப் பல் செய்யுள் முகமா அறிய அறிவித்த பெரு நாவலன்' எனவும் பாராட்டிப் போற்று தல் இயல் பேயன்றே? பாம்பின் கால் பாம் பன்றோ அறியும்?

சேக்கிழார் பெருமான் செம் பொருள் காட்டி விளக்கம் செய் தருளிய தேவாரத் திருப்பாடல் கள் பலவற்றுள், ஒன்றினைமட்டும் ஈண்டு இச்சிறு கட்டுரையில் குறித்தல் சாலும்.

**'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை**
**கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில்நல் வாளொடும் பெருந்தகை இருந்ததே'**

என்னும் தேவாரப் பாடல், சைவ மெய்யுணர்வு சிறிதேனும் உடை யார் யாவராயினும், அவரனை வரும் அறிந்ததொன்று. அதனைப் படிக்குங்காலும், பாடுங்காலும் நாம் அனைவரும் பொதுவாகப் பொருளாக எண்ணுவது, '**கழுமல வள நகரின் கண் பெண்ணின் நல்ல வளாகிய பெருமாட்டியுடன் பெருந் தகை எழுந்தருளியிருந் தருளுகின் றார் : அதனால் நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், நமக்கு வைகலும் எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை**' என்பதே யாகும். இவ்வெளிப் பொருளைத் தவிர நாம் வேறு பிறிதெதுவும் எண்ணுவதில்லை. இந்தப் பாடல் திருஞானசம்பந்தப் பெருந்தகை யால் எப்போது, எங்கு, எந்தச் சூழ்நிலையில் பாடப்பெற்றது? என்பன போன்ற செய்திகள் குறித்து நாம் சிறிதும் சிந்த னையே செய்வதில்ல. ஆனால் சேக்கிழர் பெருமான் இப் பாடலை நம்போல் எளிய நிலை யில் பொருள்கொண்டு அமைந்து விடாமல், திருஞானசம்பந்தப் பெருந்தகையின் உணர்வினோடு தம்முணர்வும் ஒன்றி இயைந்து நின்று உணர்ந்த அனுபவத்தி னைத் தெய்வத் திருவருளால் பெற்று, இத்திருப்பாடல் எப் போது, எங்கு, எந்தச் சூழ்நிலை யில் இனிதருளிச் செய்யப்பட்டது

என்னும் செய்தியினை, நம்ம னோர் உய்யத் தெருட்டி அருளு கின்றார். அத்திறம் அவர்க்கன்றிப் பிறர்க்கும் இயலுங்கொல்!

திருஞாசம்பந்தப் பெருமான் பாண்டி நாட்டில் சிவநெறியைச் செழிப்பித்துத் திருநீற்றொளி பரப்பி, மங்கையர்க்கரசியாரும் குலச் சிறையாரும் மகிழ்ந்து வணங்க, மதுரையின்கண் சில நாள் தங்கியிருந்தார். அப்போது தம் அருமைத் தவப்புதல்வரின் பிரிவைத் தரிக்கலாற்றாத சிவ பாத இருதயர், அவரைக் காணு தற்குக் கழிபெரு வேட்கை மீதூர்ந்து, பாண்டிநாடு நோக்கிப் புறப்பட்டு மதுரையைச் சென்று அடைந்தார்.

மதுரையில் திருஞானசம் பந்தர் தங்கியிருந்த திரு மடத்தை வினவித் தெரிந்து கொண்ட தேடி யடைந்தார். அங்கிருந்த அன்பர் கள் அவரை வணங்கி வரவேற்று அவர்தம் வரவினைத் திருஞான சம்பந்தருக்கு மகிழ்ச்சியுடன் அறிவித்தனர்.

பெருமான் அதுகேட்டு எப் பொழுது வ்ந்தருளிற்று? என வினவி எதிர் எழுந்தருளினார். சிவ பாத இருதயர் தாம் முன் தொழுது சென்றணைந்தார். பெருமான் அவரை எதிர் தொழுது மகிழ்ந் தார். உலகியல் தந்தையைக் கண்ட திருஞான சம்பந்தருக்குத் தமது அருளியல் தந்தையின் நினைவு எழுந்தது. தமது **'தாயும் தந்தையும்'** நலமா? என்று உசா வியறியும் வேட்கை அவர்பால் மிக்கெழுந்தது. ஏனைய உயிர்கட் கெல்லாம் பொதுவாக அம்மை யப்பனாய் விளங்கும் இறைவன், திருஞானசம்பந்தர் திறத்தில் உண்மையிலேயே அம்மை அப்ப னாப் எழுந்தருளி இளங்குழவிப் பருவத் திற்றானே ஆண்டு கொண்டு தண்ணளி புரிந்தனன் அல்லனே? அத்தகைய அம்மை யப்பரின் நலத்தை வினவியறிய அவருள்ளம் விரைந்தது. அம்மன எழுச்சியால் பெருமான் சிவபாத இருதயரை நோக்கி,

> 'அருந்தவத்தீர்! எனை அறியாப்
> பருவத்தே எடுத்தாண்ட
> பெருந்தகை எம் பெருமாட்டி யுடன்
> இருந்ததே?'

எனத் திருப்பதிகம் போற்றிசைந் தார். அத்திருப்பதிகமே **'மண்ணில் நல்லவண்ணம்'** எனத் தொடங்கு வதாகும். அத்திருப்பதிகம், இத்த கைய ஒரு பொருந்திய சூழ்நிலை யிலேயே திருந்த அருளிச் செய் யப்பட்டது என்பதனைச் சேக்கி ழார் பெருமான், "காலம் இடை யிட்ட வற்றையும், தேயம் இடை யிட்டவற்றையும், தேயம் இடை யிட்டவற்றையும் காணும் ஞானக் கண்" கொண்டு உணர்ந்து நமக்கு உணர்த்தியருளுகின்றார்.

திருஞான சம்பந்தரின் உணர்வோடு, சேக்கிழார் பெருமான் உணர்வும் ஒன்றி இயைந்து நின்று திளைத்திருந்தாலன்றி, இச்சூழ் நிலையை அவர் இனி துணர்தல் இயலுமோ? சேக்கிழாருக்கு இச்சூழ் நிலையின் பெற்றியுணர் தற்குப் பெரிதும் உதவியது, 'பெண்ணின் நல்லாளொடும் பெருந் தகையிருந்ததே' எனவரும் ஈற்றடியில், 'இருந்ததே' என்னும் சொல்லில் உள்ள ஏகாரமே யாகும். நம்போன்றோர் அவ்வேகாரத்தினை 'அசை' என்றே 'பிற' என்றே, எள்ளித் தள்ளிவிடுவோம். சேக்கிழார் பெருமான் தேவாரத் திருப்பாடல்களின் ஒரு சிறு எழுத்தினையும் பொருளற்றதெனப் புறக்கணிக்க உளம் இசைவாரோ! சேக்கிழார் அவ்வேகாரத்தினை வினாப்பொருளில் போந்ததென்ன நுண்ணிதின் உணர்ந்தார். தாம் உணர்ந்து உவந்த அச்செம்பொருளை,

'மண்ணின்நல்ல என்றெடுத்து மனத்தெழுந்த பெரு மகிழ்ச்சி
உண்ணிறைந்த காதலினால் கண்ணருவி பாய்ந்தொழுக
அண்ணலார் தமைவினவித் திருப்பதிகம் அருள்செய்தார்
தண்ணறும்பூஞ் செங்கமலத் தார் அணிந்த தமிழ்விரகர்'

என்னும் பாடலால் நாமும் உணர்ந்துமகிழ விளக்குகின்றார்.

இதன்கண் 'அண்ணலார் தமைவினவித் திருப்பதிகம் அருள் செய்தார்' என, அத்திருப்பதிகக் கருத்தினையே சுரங்கத் தொகுத்துக் திரட்டியுரைப் பார்போல, அருளிச் செய்திருக்கும் திறம் பெரிதும் இன்புறற்பாலது. ஏகாரம் வினாப் பொருளில் அமைந்தது என்பதனைக் குறிப்பதற்கு 'வினவி' என்னும் சொற்பெய்து உணர்த்தியுள்ள அருமைப்பாடும் அனைவரும் வியக்கத் தகுவது. அன்றியும்,

'போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே?'

எனவரும் அத்திருப்பதிகப் பாடலின் கருத்தைத் தழுவி, அதன் பொழிப்புரைபோல, " அருந்தவத்தீர்! எனை அறியாப் பருவத்தே எடுத்தாண்ட பெருந்தகை எம் பெருமாட்டி உடன் இருந்ததே" என அருளிச் செய்திருக்கும் அழகும் நம்மனோர்க்கு ஆராப் பெரு விருந்தாய் அமைகின்றது. சேக்கிழார் பெருமான் விளக்கும் இன்னோரனைய செம்பொருள்கள் பலவற்றையும் தெளிந்து ணர்ந்து உய்ய, நாம் அனைவரும் திருவருளை வழுத்துவோமாக.

நன்றி
சித்தாந்தம்

# வீடு பேற்றில் மலம் உண்டா?

(முரு. பழ. இரத்தினம் செட்டியார்)

'முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்தஅனு போகத்தைத் துய்த்தலனு - மெத்தவே
இன்பம் கொடுத்தலிறை இத்தை விளை வித்தல்மலம்
அன்புடனெ கண்டுகொளப் பா.'

- மனவாசகம் கடந்தார்

இவ் வெண்பா சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்றாகிய, 'உண்மை விளக்க' த்தில் உள்ளது. சித்தாந்த உலகில் மிகப் பெரிதும் ஆட்சியில் உள்ள செய்யுட்களில் இஃதும் ஒன்று. எனிலும் இதற்கு உரை காண்பதில் அறிஞர்களிடையே ஒருமைப்பாடு இல்லை. இக்கட்டுரையின் நோக்கம் இதனை ஆராய்ந்து தக்கதொரு முடிபு காண்பதாகும்.

மேற்காட்டிய வெண்பா அமைந்து கிடந்தவாறே பொருள் சொல்வ தென்றல், பின்வருமாறு கூறலாம்:-முத்திப்பேற்றில் இறை, உயிர்: ஆணவ மலம் ஆகிய மூன்று நித்தியப் பொருள்களும் எவ்வாறு உள்ளன என்பதைக் கூறுகிறேன்: கேட்பாயாக. பேரின்பத்தை ஆன்மா அநுபவித்துக் கொண்டிருக்கும்: இறைவன் அவ்வின்பத்தினை அதற்கு வழங்கிக் கொண்டிருப்பான்: ஆணவமலம் அவ்வின்பத்தினை விளைவித்துக் கொண்டிருக்கும்." இங்ஙனம் பொருள் கொள்ளும்போது, ஆணவமலம் பற்றிக் கூறுகின்ற இடத்தில் இடர்ப்பாடு வருகிறது. ஆன்மா, பேரின்பத்தை நுகரும் என்பதிலோ, இறைவன் அதனை வழங்குவான் என்பதிலோ கருத்து வேற்றுமை கொள்ளக் காரணமில்லை. துன்பங்கள் அத்தனைக்கும் மூலகாரணமாக உள்ள ஆணவமலம் இன்பத்தினை விளைவிக்கும் என்று சொன்னால் எங்ஙனம் ஒப்புக்கொள்ளுவது?

காலஞ் சென்ற சைவ சித்தாந்தப் பேரறிஞர் திரு. பொ. முத்தையபிள்ளை எழுதியுள்ள சிவஞான சித்தியார் உரையில், இத்தை விளைவத்தன் மலம்" என முத்தியினும் மலம் உண்டென்று சாதித்திருக்கவும், முத்தியில் மலம் நீங்குமென்றல் எவ்வாறு

பொருந்துமெனின், துன்பத்தை விளைவிக்கும் மலம் இன்பத்தை விளைவிக்கமாட்டாது, இருள் ஒளியைச்செய்தல் எக்காலத்து மில்லையாதலின், மல நீக்கமே இன்பத்தை விளைவிக்கும் என்பதை இவ்வாறு கூறினராகையால் மலம் நீங்குமென்றல் பொருந்து மென்க: இச்செய்யுளில் இல்லை என்னும் உணர்வுக்கு விடயமாய் மலம் நின்றவாறறிக. ஆயினும் இல்லையென்று கூறவேண்டிய மலத்தை உண்டென்று கருதும் வண்ணம் கூறியது பொருந்துமோ எனின், சுருக்கிக் கூறவேண்டிய இடங்களில் அவ்வாறு கூறுதல் நூல் வழக்காதலின் பொருந்தும். இதனை, **'கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே யெடுப்பதூஉ மெல்லாம் மழை'** என்னும் திருக்குறளானு மறிக. **'மழை கெடுப்பதூஉம்'** என்பதற்கு மழையின்மை கெடுப்பது பொருளாதல் போல, **'மலம் சித்தை விளைவித்தல் என்பதற்கு மலமின்மை இத்தை விளைவித்தல் என்பது பொருளாதல் அறிக'** என விரிவானதொரு விளக்கம் கூறியிருக்கிறார். இவ்வுரையினைப் படிக்கும் பொழுதே, இது மிகவும் வலிந்து எழுதிய உரை என்பது புலனாகின்றது.

ஆசிரியர் மனவாசகம் கடந்தார், முத்திப் பேற்றில் மூன்று முதல்களையும் கூறுகிறேன்" என வெண்பாவைத் துவங்குவதிலிருந்தே, ஆண்டு முப்பொருளும் உண்டு என அவர் கருதுகிறார் என்பது நன்கு விளங்குகிறது. எனவே அவர் கருத்துக்கு ஏற்ப நாம் உரை செய்யாமல், **'இத்தை விளைவித்தன் மலம்'** என்று அவர் கூறியிருக்க, அதற்கு நேர்மாறாக மலமின்மை எனப் பொருள் கொள்வது எவ்வாற்றானும் பொருந்தாது. சுருங்கக்கூறுதல் நூல் வழக்காயினும் மயங்கக் கூறுதல் நூற் குற்றத்தினுள் ஒன்று. மேற்கோள் காட்டிய திருக்குறளில் இதுபோன்ற மயக்கம் இல்லை. **'கெடுப்பதூஉம்'** என்பதற்கு மறுதலைப் பொருளில் **'எடுப்பதூஉம்'** என்னும் சொல் வருகிறது. ஒன்றினுக் கொன்று மாறாயுள்ள கேடும் ஆக்கமும் ஒரே குறளில் கூறப்படுவதால் மழையின்மை கெடுப்பதும் எனவும், மழை உண்மை எடுப்பதும் எனவும் பொருள்சொல்ல இடமிருக்கிறது. பரிமேலழகர், **'மற்று வினைமாற்றின் கண்வந்தது: ஆங்கு என்பது மறுதலைத் தொழிலுவமத்தின் கண் வந்த உவமச் சொல்'** என இதற்கு இலக்கணக்

குறிப்புக் காட்டுகிறார். இங்ஙனம் இலக்கணம் கூற இச்செய்யுளில் குறிப்பொன்றும் இல்லை. மேலும் இல்லையென்னும் உணர்விற்கு மட்டும் விடயமாகிய நிற்கும் பலத்திற்குச் செயல் எங்ஙனம் வரும்? இன்மைப் பொருளுஞ்குச் செயல் கூற முடியாது. இங்கு **'இத்தை விளைவித்தன் மலம்,'** என அதற்குச் செயல் பேசப்பட்டிருக் கிறது. மலமின்மை இன்பப் பேற்றிற்கு ஏதுவாக நிற்றலால் அங்ஙனம் கூறினாரென்றால், அஃது உபசாரமாகச் சொன்ன தாகுமே அன்றி உண்மை நிலையைச் சொன்னதாகாது. ஈண்டு உபசாரப் பொருள் சொல்வதில் என்ன சிறப்பு இருக்கிறது? எனவே ஆசிரியர் கருத்துக்கு முரணாகப் பிள்ளை அவர்கள் கூறும் உரையை நாம் வருத்தத்தோடு நிராகரிக்க வேண்டியதிருக்கிறது.

வேறு சிலர், **'மலமின்மை'** எனப் பொருள் கூறாமல், இன்பத்தினை விளைவித்தல் மலம் என்றே பொருள்கூறி, அது பொருந்தும் என்பதற்கு அடியில் காரணம் கூறுகிறார்கள்: - **'துன்ப அநுபவம் இருந்தாலன்றி இன்பப் பேற்றினைப் பூரணமாய் அநுபிக்க முடியாது: வெயிலில் சென்று வந்தவனுக்குத்தான் நிழலின் சுகம் தெரியும். அநாதியாக ஆன்மா மல வெப்பத்தால் துன் பற்றுப் பின் இறைவன் திருவடி நீழலை அடைவதாலேயே பேரின்பத்தினை மிகுதியாய் அநுபவிக்கிறது. இத னால் ஆணவமலம் இன்பத்தினை விளைவிக்குமென்றால் பொருந்தும் என்க.'** இவ்வாறு சமாதானம் கூறுகின்றவர்களும் மலத்திற்கு உபசாரச் செயல்தான் கூறுகிறார் கள். உண்மையில் மலம் துன்பத்தினை விளைவிக்குமே அன்றி இன்பத்தினை விளைவிக்காது. திரு. பொ. முத்தையபிள்ளை அவர்கள் எடுத்துக்காட்டியிருப் பதுபோல இருள் ஒளியைச் செய் தல் எக்காலத்தும் இல்லை. மலத் தால் ஏற்பட்ட துன்ப அநுபவம், இன்பத்தினை அநுபவிக்கத் துணை செய்தலால், மலம் இன் பத்தினை விளைவிக்கும் என்பது உபசாரமே அன்றி வேறன்று. புலவரொருவர், பரத்தையர் வீதி பற்றிப் பாடுகையில் "தம்மை அடைந்தோர் அத்தனை பேரையும் வறியவர்களாக்கி, அவ் வறுமையால் ஏற்படும் துன்ப அநுபத்தால், அவர்கள் உலக வாழ்வினையே வெறுத்துத் துறவு பூண்டு ஞானவான்களாகும்படி செய்வதால், இவ்வீதியில் வாழ் கின்ற பரத்தையர் ஞானத்தை விளைவிப்பவர்கள் என்பதிற்

சந்தேகமில்லை" என்று கூறுகிறார். மலம் இன்பத்தினை விளைவிப்பதாகச் சொல்வதையும் இதுபோன்ற ஒரு நயமாக வேண்டுமானால் கொள்ளலாமே அன்றிச் சிறப்பான ஒரு கருத்தாகக் கொள்ளமுடியாது.

இன்னும் சிலர், "மலத்திற்கு உபசாரமாகச் செயல் சொல்ல வேண்டியதில்லை. உண்மையிலேயே அஃது இன்பத்தினை விளைவிப்பதற்குக் காரணமாக அமைகிறது. கூத்தாடுவான் அவையிடை நடிக்குங்கால், உள்ளிருந்து ஆட்டு பவனைத் திரை மறைத்து நிற்கிறது. அதனால் அவன் ஆசிரியனை மறந்து அவையோர் கொள்ளும் அக மகிழ்சியால் தன்னையும் தன் ஆடலையும் வியந்து பொய்யின்பம் கொள்கிறான். ஆடுவான் திரையினுட் புகுந்தால் ஆட்டுவானைக் கண்டு இன்புறுகிறான். அப்பொழுது திரை அவையை மறைத்து நிற்கிறது. திரை அவையினை மட்டும் மறைப்பது போல் காணப்படினும் அவை தோன்றாமையே அவன் ஆடாமைக்குக் காரணம்: ஆட்டுவானைக் கண்டு இன்புறுதற்கும் காரணம். அதனாலேயே திரை அவ்வின்பினை விளைவித்தது என்று கொள்ளுதல் வேண்டும். மலம் இன்பத்தினை விளைவிப்பதற்கும் இவ்வாறே கொள்க." என்று சொல்கிறார்கள். இவர்கள் சொல்வதுபோல் முத்திப்பேற்றில் ஆன்மா, காணமுடியாதவாறு உலகினையும் ஏனைய உயிர்களையும் மலம் மறைத்து நிற்குமானால் அம்மறைப்பை அதற்குரிய உண்மையான செயலாகக் கூறலாம். அம்மறைப்பால் ஆன்மா வேறொன்றனையும் அறியாது, இறைவனையே அறிந்து இன்புறுமாதலால் இன்பம் விளைதற்கு அதனை ஒரு பெருங்காரணமாகவும் சொல்லலாம். ஆனால் ஆணவமல இயல்பு எல்லாவற்றையும் மறைத்தலே அன்றி, ஒன்றைக் காட்டி ஒன்றை மறைத்தல் அன்று. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது. மலத்தைச் சார்ந்தபோது மலமயமாகி நிற்கிறது: இறைவனைச் சாந்தபோது அவன் மயமாகி நிற்கிறது. எனவே முத்தியில் பரமே பார்த்திருக்கும் தன்மை ஆன்ம இயல்பினாலும், இறைவனிடத்துள்ள இன்பப் பெருக்கினாலும் நேர்ந்ததன்றி, மல இயல்பால் நேர்ந்ததன்று, மேலும் திரை அவையினரை மறைத்தமைபோல

முத்திப்பேற்றில் மலம் ஏனைய உயிர்களை மறைக்கும் என்பதும் பொருந்தாத வொன்றாகும். சிவ ஞானபோதச் சிற்றுரையில், சிவ ஞான முனிவர், "உயிர்களும் சிவத்தோடியைந்து நின்று தன் மையும் பிறவுயிர்களையும் இவ் வாறுணர்தல் அமைவுடைய தென்பது, 'நாடி அரன் - தன்னாலே தன்னையும் கண்டு தமைக்காணர் என்னாமென வறிவார்,' என்றும், 'தன்னாலே தனை அறிந்தால் - தன்னையும் தானேகாணும் தானது வாகிநின்றே' என்றும், 'அதிலறி வடங்கி - மன்னிட வியாபியான வான் பயன் தோன்றும்,' என்றும் 'ஞான நாட்டம் பெற்றபின் யானும்... என்னையும் கண்டேன் பிறரையும் கண்டேன்' என்றும் பிறாண்டும் இவ்வாறோதும் அநுவமுடைய தேசிகா திருவாக்குக்களாலும் இவ்வுண்மை யுணர்ந்துகொள்க." எனக் கூறுவதிலிருந்து முத் தான்மா, தன்னை இறைவன் வண் ணமாய்க் காண்பது போன்று ஏனைய உயிர்களையும் காண்ப துண்டு என்பது தெரிகிறது. ஆகவே திரை உதாரணம் குற்ற முடைய தென்பது தேற்றம். இது காறும் கூறியவாற்றால் இவ்வுரை யும் பொருந்தாததாய் முடிதலால், இச்செய்யுளுக்கு என்னதான் உரை கூறலாமென்பதைச் சிந்திப் போம்.

முத்திப்பேற்றில் ஆணவ மலம் நீங்கிப்போகிறதென்று சொல்கிறவர்களும் உண்டு: ஒடுங்கிப்போகிறதென்று சொல் கிறவர்களும் உண்டு. நீக்கம் சொல்கிறவர்கள் அது முத்தான் மாவை விட்டு நீங்கினும் ஏனைப் பெத்தான்மாக்களிடதில் இருத்த லால் அதன் நித்தியத்தன்மைக்கு இழுக்கில்லை என்கிறார்கள். ஒடுக்கம் சொல்கிறவர்கள், வியா பகப் பொருளுக்கு நீக்கம் இல்லையாதலால், ஆணவமலம் தன் ஆற்றல் கெட்டு ஒடுங்கி நிற்கும் என்பதுதான் பொருத்த முடையது என்கிறர்கள். இவ் வெண்பாச் செய்தருளிய ஆசிரி யர் முத்தியில் மூன்று முதலும் உண்டு என்று சொல்வதால் நீக் கம் சொல்கிறவர்களை ஆதரிப் பவராய்த் தோன்றவில்லை. 'இத்தை விளைவித்தல் மலம்' என்பதால் வீடு பேற்றிலும் அதற்கு ஒரு செயல் உண்டு என்று அவர் கருதுபவராயும் தெரி கிறது. ஆற்றல் கெட்டு ஒடுங்கிய ஒரு பொருளுக்குச் செயல் இருக்க நியாயம் இல்லை. இத னால் ஒடுக்கம் சொல்கிறவர் களையும் இவர் ஆதரிக்கவில்லை

என்பது தெளிவாகிறது. இருதரப் பாரையும் மறுக்கும் இவர் பின் எதைத்தான் நிலைநாட்டுகிறார்? அநாதி கேவலத்தில் ஆன்மாக் களை விடுத்துத் தனியே இறை வன் நிற்கவில்லை. அப்பொழுதும் அவைகளோடு அத்துவிதமாய்க் கலந்தே நிற்கிறான். இறைவன் உடனாகக் கலந்திருந்தும் மலம் ஆன்மாக்களைப் பிணித்து நிற் கிறது. இறைவன் இருப்பதற்காக அது விலகவும் இல்லை: ஆற்றல் கெட்டு ஒடுங்கவும் இல்லை. ஆனால் ஆன்மாக்களை அது பந்தப்படுத்த முடிந்ததே அன்றி உடனிருக்கும் இறைவனைப் பந் தப்படுத்த முடியவில்லை. சுத்த நிலையாகிய முத்தியில் ஆன்மாக் கள் இறைவனோடு அத்துவித மாய்க் கலந்து நிற்கின்றன: அநாதி கேவலத்தில் இறைவன் ஆன்மாக்களோடு கலந்திருந்தும் எங்ஙனம் மலம்நின்றதோ, அது போலவே ஈண்டு ஆன்மாக்ள் இறைவனோடுகலந் திருந் தும் மலம் நிற்கிறது. ஆனால் ஆங்கு அஃது இறைவனைப் பந்தப் படுத்த முடியாது நின்றனபோல, இங்கே முத்தான்மாக்களைப் பந்தப்படுத்த முடியாது நிற்கிறது. பந்தப்படுத்த முடியாமைக்காக மலம் தன்னளவில் ஆற்றல் இழந்துவிட்டதென்றோ, இல்லா மற் போய்விட்டதென்றோ கூறமுடி யாது. இராமன் என்பான் ஆறடி உயரம் இருந்தால் அவனைத் தனிமையில் நோக்கும்பொழுது, 'நெடியன்' என்றே கூறுகிறோம். ஆறே கால் அடி உயரம் உள்ள சாத்தன் என்பவனோடு நோக்கு கையில், அவனைக் குறியன் என்று சொல்கிறோம். உண்மை யில் இராமன் தன்னளவில் ஓரங் குலம் கூடக் குறுகவில்லை. எப் பொழுதும் போல் நெடியனாகவே இருக்கின்ற அவன் சாத்தனை நோக்கக் குறயனாகிறான். இது போல மலம் தன்னிடத்தில் உள்ள ஆற்றல் குறையாது எப் பொழுதும்போல் இருப்பினும், முத்தான்வான்மாக்களை நோக்க அது 'வலிகெட்டதென்றோ,' 'ஒடுங்கிப்போயிற்று என்றோ' 'விட்டு நீங்கியதென்றோ' கூறுகிறோம். 'ஒடுக்கம்,' 'நீக்கம்' என்னும் சொற்களுக்கு இங்ஙனம் பொருள் கொள்ளாமல் உண்மையிலேயே முத்தியில் மலம் ஒடுங்கிப் போகிறது என்றோ, இல்லாமற் போய்விடுகிறதென்றோ பொருள் கொண்டு மயங்கக் கூடாதென் பதற்காகவே ஆசிரியர் மன வாசகம் கடந்தார் இச்செய்யுளில் தெளிவாக முத்தியிலும் மலம்

உண்டு எனது ஒப்பக் கொண்டாலும் அது முத்தர்களைப் பாதிக்காது என்பது தேற்றம். அங்ஙனமானால், **'இத்தை விளைவித்தல் மலம்'** என ஆங்கு ஆசிரியர் அதற்குக் கூறுகின்ற செயல்யாதாக இருக்க முடியும்? இனி அதனை ஆராய்வோம்.

மலம் - இறைவனைப் பந்திக்க முடியாது நிற்றல்போல, முத்தியில் ஆன்மாக்களையும் பந்திக்க முடியாமல் நிற்பதால், முத்தர்களும் இறைவனுக்குச் சமமாதல் செல்லும் எனக் கொள்ள இடம் உண்டாகிறது. **'ஆன்மா முத்தியில் சிவசமம்'** என்னும் சுருதி வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு, **'முத்தர்கள் சிவசமமாகி ஐந்தொழிலும் செய்வர்'** எனச் சிவசமவாதிகள் கூறுகின்றனர். இவர்கள் கூற்றைச் சித்தாந்த சைவர்களாகிய நாம் வன்மையாக மறுக்கிறோம். மல பந்தத்தினின்றும் விடுபட்டாலும் இறைவன் துணையின்றித் தனித்தியங்கும் ஆற்றல் ஆன்மாவிற்கு இல்லாமையால், பெத்தம், முத்தி இரண்டினும் அஃது அடிமையே ஆகுமன்றிச் சமமாகாதென்றும், முத்தியில் சிவானுபவம் ஒன்றினுக்கு மட்டுமே அஃது உரியதென்றும், இறைவன் ஒருவனே ஐந்தொழிற்கும் உரியவனென்றும் நாம் கொள்ளுகிறோம். ஆனால் சிவசமவாதிகள் நம் கொள்கையை எளிதில் உடைப்பதற்கு வழி இருக்கிறது. இறைவன் துணையின்றித் தனித்தியங்கும் ஆற்றல் ஆன்மாக்களுக்கு இல்லை என்பது உண்மை. ஆனால் முதல்வனை எதிர்த்து நின்று ஆன்மாக்கள் ஐந்தொழில் ஆற்றும் என்றால்தான் இதனை ஒரு காரணமாக எடுத்துக்காட்டி நம் கொள்கையை நிறுவலாம். கருணையினால் இறைவன் ஆன்மாக்களைத் தன் போலாக்கித் தானே உறுதுணையாக நின்று ஐந்தொழில் புரியும் உரிமையை அவைகட்கு வழங்குவான் என்று கூறினால் இக்காரணம் வலியிழந்து போகிறது. ஆண்டவன் ஆன்மாக்களின் அடிமைத் திறத்தை எதிர்பாத்தது துணை செய்பவனல்லன்: அவை என்றும் அடிமையாகவே இருக்க வேண்டுமென விரும்புபவனுமல்லன். தன்னை அடுத்த மாணாக்கனை என்றும் மாணாக்கனாகவே ஆசிரியன் வைத்திருப்பதில்லை: அவனைத் தன்னைப்போல ஆசிரியனாக்கிப் பிறர்க்குக் கல்வி பயிற்றத் துணைசெய்வதை நாம்

காண்கின்றோம். மாணாக்கன் தன்னைப்போலக் கல்வி பயிற்று விக்கும் திறனைக் கண்டு மகிழ் வதே நல்லாசிரியனுக்குரிய இலக் கணமாகவும் நாம் கொள்கின் றோம். 'தன்னையறி வித்துத் தான் றானாச் செய்தானை' என்றும், 'எண்குணத்துளோமே' என்றும் ஆன்றோர்கள் கூறும் திருவாக் குக்களும் இறைவன் ஆன்மாக் களைத தன் போலாக்குவன் என் பதற்கு ஆதாரமாக அமைவதால் முத்தியில் ஆன்மாக்கள் சிவசம மாக முடியும் எனச் சிவ சமவாதி கள் நமக்குள்ளேயே நுழைந்து தம் கொள்கையை நிலைநாட்டப் பார்க்கின்றனர். இவர்கள் கூற்றை மறுப்பதென்றால், ஆன்மாக்க ளுக்கு இறைவன் உறுதுணை யாக நின்றாலும் கூட அவை அவனைப் போலச் சமமாகா என் பதற்கு வலிமைமிக்க ஒரு காரணம் காட்டல் வேண்டும். சிவசமமாகி ஆன்மாக்கள் ஐந் தொழில் ஆற்றா எனக் கூறுகின்ற நாம், இறைவன் கீழ்நின்று அவன ருளே வல் வழி ஐந்தொழில் ஆற் றும் ஆன்மவர்க்கம் இல்லை யெனச் சொல்லவில்லை. நந்த தேவர், சீகண்டருத்திரன் முதலி யோர் புவனத் தலைவர்களாய் இருந்து, படைப்பு முதலிய தொழில்களைப் புரிகின்றனர். விஞ் ஞானகலராகிய அநந்ததேவரும் பிரளயாகலராகிய சீகண்டருத்திர ரும் ஆன்மாக்களே. நம்மைப் போல் சகல வர்க்கத்து ஆன்மாக் களாகிய பிரம, விஷ்ணுக்களும் படைத்தல், காத்தல் ஆகிய தொழில்களைச் செய்கின்றனர். இங்ஙனம் இறைவன் துணையால் இவர்கள் தொழில் செய்யினும், ஆணவமலபந்தம் இவர்களுக்கு இருக்கவே செய்கிறது. மிகப் பெரிய நிலையிலுள்ள அநந்த தேவர், சீகண்டருத்திரர், சதாசிவர் அகியோர்க்கும் தலைமை செலுத் துதலால் உண்டாகும் செருக் காகிய அதிகாரமலம் உண்டென நூல்கள் முழங்குகின்றன. சிறிய அளவில் மலத்தொடக்கு இருப் பினும் அதனால் உண்டாகும் மறைப்பால் இவர்கள் அறிவிலும் இன்பத்திலும் குறைபாடுடையவர் களாவராதலால் இறைவனைப் போல் இவர்கள் சமமாக முடியா தென்பதைச் சொல்ல வேண்டிய தில்லை. தம்மிலே அறிவும், இன் பமும் குறைந்த இவர்கள் ஏனைய உயிர்கட்குப் பேரின்பப் பேற்றை வழங்க முடியா தென்ப தும் நன்கு விளங்கும்.

இறைவன் ஆன்மாக்களை அடிமையாக வைத்திருக்க

வில்லை. தன்னைப்போல அவை களும் ஐந்தொழில் ஆற்றும் வண்ணம் திருவருள் செய்கிறான் என்பதை அநந்ததேவர், சீகண்ட ருத்திரர் முதலியோர்கள் வாயிலாய் அறிகின்றோம். ஆனால் இறைவனோடு ஒப்ப வைத்தெண்ணப்படக்கூடிய அத்துணை மேம்பட்ட நிலையின ராகிய இவர்களும் இறைவனுக்குச் சமமாக முடியாமைக்குக் காரணம் ஆணவமலம் இவர்கள் அறிவைத் தடைசெய்வது தான். மலத்தடையிலிருந்து அறவே விடுபட்டு அறிவும் இன்ப மும் விளங்கப்பெற வேண்டு மானால் இவர்களும் செயலாற்று வதை ஒழித்து, இறைவனைச் சரண் புகுந்து அவனடிக்கீழ் அடிமை யாய் நிற்கவேண்டிய திருக்கிறது. ஆகவே மலமென்னும் ஒரு பொருள் உள்ள அளவும் எந்த ஆன்மாவும் சிவசமமாக முடியா தென்பது நிச்சயமாகின்றது. மலமோ நித்தியப் பொருளாய்த் தன்னளவில் எக்காலத்தும் யாண்டும் ஆற்றல் குன்றாததாய் இருப்பதால் ஆன்மாக்களும் ஒரு காலத்திலும் சிவ சமமாகப் போவதில்லை.

முத்தர்கள் இறைவனைச் சரண்புகுந்து அவனடிக்கீழ் அடிமையாய் நிற்பதால்தான் மலத்தால் தாக்குறாமல் இருக்கிறார்கள். தம்மைச் சரணடைந்த முத்தர்களை மலம் தாக்காதவாறு காக்கின்ற இறைவன், அவர்களைத் தன்னைப்போல் ஐந்தொழில் ஆற்றச்செய்து, மலத்தால் தாக்குறாத வண்ணம் காக்க முடியாதோ எனக்கேட்கலாம். அவனாலும் இது முடியாத காரிய மாகவே இருக்கிறது.

ஆன்மாக்கள் சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையன. இவ்வியல்பால் மலததைக் காரியப்படுத்துவதாகிய ஐந்தொழிலை அவை செய்யப்புகின், மலத்தால் தொடக்குறவே வேண்டியதுவரும். இதனால்தான் முத்தர்கள் வேறொன்றையும் பற்றாது இறைவனையே பற்றி அவன் வழங்கும் பேரின்பத்தை அநுபவிப்ப தொன்றே பயனாகக் கொண்டிருக்கின்றனர். "புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய்" மேன்மேலும் விளையும் பெற்றியையுடைய பரபோகத்தை அவ்கள் துய்ப்பதால் அதுவே முத்திப் பெரும்பயன் என்பதிலும் சந்தேகமில்லை.

இறைவனாலும் ஐந்தொழில் செய்யும் ஆன்மாக்களை மலத்தால் தாக்குறாமற் காக்க முடியா

தென்பது எல்லாம் வல்ல அவன்றன் அறைமைக் குணத்திற்குப் பேரிழுக்காய் முடிகின்றதே என்று அன்பர்கள் திடுக்கிடக்கூடும். **'இறைவன் ஆணவமலத்தை அறிவினை விளக்கும் ஒளியுடைப் பொருளாய் மாற்றமுடியாது,'** என்று கூறினால் அஃது எங்ஙனம் இறைவன்றன் எல்லாம் வல்லமைக்கு இழுக்காகாதோ அதுபோல இஃதும் இழுக்காகாது. பொருள்களின் இயல்பை மாற்றுவது வல்லபத்துக்கு இலக்கணமன்று: அவற்றின் இயற்கையை அறிந்து அவற்றால்தான் தாக்குறாமல் நின்று, அவற்றைக் காரியப்படுத்துதலே வல்லமைக்கு இலக்கணமாம். பற்றிய பொருளில் அழுந்துகின்ற ஆன்ம இயல்பு மாற்றப்பட முடியாத ஒன்றாதலால் ஐந்தொழில் செய்யும் ஆன்மா மலத்தால் தொடக்குறுதலைத் தவிர்க்க முடியா தென்க.

சிவசமம் என்பது இறைவனைப்போல ஐந்தொழில் ஆற்றுவதுதான் எனச் சிவசமவாதிகள் சொல்கின்றனர். ஆனால் ஆன்மாக்கள் ஐந்தொழில் ஆற்றின் ஆணவமலம் அவற்றின் அறிவினைக் குறைத்துவிடுவதால் அவை சிவசமமாக முடியாமற் போகின்றன என்பதை மேலே காட்டினோம். எனவே சிவசமவாதம் செல்லாதென்பதற்குச் சரியான மறுப்பாய் அமைவது ஆணவமல இருப்பே ஆகும். முத்திபெற்ற ஆன்மாக்கள் பிறப்பு இறப்பினுக்குட்படாமலிருப்பதால் அவை சிவசமம் என வேதாகமங்கள் கூறுகின்றன என்பதே சித்தாந்த சைவக் கருத்தாகும். மலம் நித்தியப்பொருளாய் இருப்பதால், அதன் தாக்குதலுக்கு அஞ்சி, முத்தர்களும் ஒரு செயலும் ஆற்றாமல் இறைவனுக்கு அடங்கி அடிமையாகவே இருக்க வேண்டியதிருக்கிறது. முடிந்த நிலையாகிய முத்தியிலும் சமநிலை எய்தவொட்டாமல் ஆண்டானாகிய இறைவன் இன்பத்தை வழங்க, ஆன்மா அடிமையாகவே இருந்து அதனைத்துய்த்து அமையவேண்டியதான ஒரு நிலையை மலம் விளைவிக்கிறது. ஆசிரியர் மனவாசகங் கடந்தார், **'இத்தை விளைவித்தல்'** என்று கூறியதற்கு எல்லாரும் **'இந்த இன்பத்தினை விளைவித்தல்'** என்றே பொருள் கொண்டிருக்கின்றனர். இன்பம் இறைவனிடத்துள்ள தென்பது யாவரும் நன்கறிந்த ஒன்றாதலால், **'இன்பங்கொடுத்தல் இறை'** என்பதிலிருந்தே இறைவனால் அவ்வின்பம் விளைகிறது என்பது

தெளிவு. ஆகவே **'இத்தை விளை வித்தல்'** என்பதற்கு மீண்டும் **'இந்த இன்பத்தை விளைவித்தல்'** எனப் பொருள் கொள்ளவேண்டிய அவசியமில்லை. **'சுத்த அநுபோகத்தைத் துய்த்தல் அணு', 'இன்பங் கொடுத்த லிறை'** எனக் கூறிய பின்னர், **'இத்தை விளைவித்தல் மலம்'** என்பதால், **'இந்த நிலையினை விளைவித்தல் மலம்'** எனப் பொருள் கொள்ளுதல் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. முத்தியில் ஆன்மா இன்பத்தைத் துய்க்கிறது: இறைவன் அவ்வின்பத்தை வழங்குகிறான்: பெறுவானும் கொடுப்பானுமாக இருக்கின்ற நிலை சமம் அற்ற நிலையாகும். இந்த நிலையை மலம் விளைவிக்கிறது.

எனவே, இங்கு ஆராய்வான் எடுத்துக்கொண்ட உண்மை விளக்கச் செய்யுளுக்குப் பின்வருமாறு உரை விரித்துக் கொள்ளுவது எற்றதாக இருக்குமெனக் கருதுகின்றோம்: - "வீடு பேற்றிலும் உயிர், இறை, ஆணவமலம் ஆகிய மூன்று பொருள்களும் உண்டு. சுத்த அநுபோகமாகிய பேரின்பத்தைத் துய்ப்பது ஆன்மா: அதனை வழங்குவது இறைவன் : இங்ஙனம் முத்தியிலும் சமமாக முடியாமல் இறைவன் கொடுக்க, ஆன்மா துய்த்து அமையும் நிலையை விளைவிப்பது மலம்." இங்கெயாம் கூறிய கருத்துக்கள் தவறுடையனவாகக் காணப்படின் அறிஞர்கள் கருணை கூர்ந்து அவற்றை எடுத்துக்காட்டி விளக்கம் தருமாறு மீண்டும் வேண்டிக் கொண்டு இதனை முடிக்கின்றோம்.

**நன்றி**
**சித்தாந்தம்.**

---

ஐந்தொழிலும் காரணர்கள் ஆம்தொழிலும் போகம்புகர்
வெந்தொழிலும் மேவார் மிக.

---

# ௬. தருமம் தலை காக்கும்

(மு. சோமசுந்தரம்)

தர்மம், அறம் என்பவை ஒரு பொருள் சொற்கள், தர்மம் வடமொழிச் சொல், அறம் தமிழ்ச் சொல்.

பெரும்பாலோர் பிறருக்கு இலவசமாகப் பொருள் உதவி செய்வதே அறம் என்று நினைக்கின்றனர். உண்மையில் இயம நியமத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவதே, அஃதாவது விதிக்கப்பட்டதைச் செய்வதும், விலக்கப்பட்டதைத் தவிர்ப்பதுமே அறமாகும். விதிக்கப்பட்டதைச் செய்யாதிருப்பதும், விலக்கப்பட்டதைச் செய்வதும் பாவமாகும். எனவே தான், மாணிக்கவாசக சுவாமிகள் சிவ புராணத்தில் **'அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி'** என்றார். அறம் நல்வினை, பாவம் தீவினை.

அருணந்தி சிவாசாரியர் சிவ ஞானசித்தியார் சுபக்கம், சூத்திரம் 2, அதிகரணம் 2ல்,

**'ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்**
**உபசாரம் உறவு சீலம்**
**வழுக்கிலாத் தவம்தா னங்கள்**
**வந்தித்தல் வணங்கல் வாய்மை**
**அழுக்கில்லாத துற(வு) அடக்கம்**
**அறிவொ(டு) அர்ச்சித்தல் ஆதி**
**இழுக்கிலா அறங்கள் ஆனால்**
**இரங்குவன் பணிஅ றங்கள்'**
என்றார்.

திருவள்ளுவரும்,

**'மனத்துக்கண் மாசிலன் ஆதல்**
**அனைத்(து) அறன்**
**ஆகுல நீர பிற'** என்றும்

**'அழுக்காறு அவாவெகுளி**
**இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்'**
என்றும்

**'அகனமர்(ந்து) ஈதலின் நன்றே**
**முகனமர்ந்(து)**
**இன்சொலன் ஆகப் பெறின்'**
என்றும்

**'தெருளாதான் மெய்ப்பொருள்**
**கண்டற்றால் தேரின்**
**அருளாதான் செய்யும் அறம்'**
என்றும்

**'உதவி வரைத்தன்று உதவி உதவி**
**செயப்பட்டார் சால்பின் வரைத்து'**
என்றும்

'காலத்தி னால்செய்த நன்றி
சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'
என்றும் கூறியுள்ளார்

அறம் உயிருக்கு உறுதி பயக்கும். பாவம் உயிருக்கு ஊறு விளைவிக்கும். அன்பு அறத்திற்கும் வித்தாகும். அதேவேளையில் மறத்திற்கும் (வீரத்திற்கும்) துணையாகும். எனவே தான், திருவள்ளு வர்,

'அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'

என்றார் அன்பின் அடிப்படையில் செய்யும் அறமே அருளாகித் தனக்கென வாழாத் தகைமையைத் தந்து, யான் எனது என்பவற்றை நீங்கச் செய்து, அதன் வழி வீடுபேற்றை (பேரின்பத்தை) நல்கும். எனவே, அறம், பொருள், இன்பம், வீடு இந்நான்கும் புருஷார்த்தங்கள் (உறுதிப்பொருள்கள்) ஆகின்றன.

அறத்தினால் ஞானமும், ஞானத்தினால் வைராக்கியமும், வைராக்கியத்தினால் ஐஸ்வர்யமும் (பொருளும்) ஏற்படுகின்றன.

எனவே தான், ஔவைப் பிராட்டியாரும், 'அறஞ்செய விரும்பு', இயல்வது 'கரவேல்', பிறரை நோக்கி 'ஈவது விலக்கேல்' என்றும் கூறியுள்ளார். பிறர் கொடுப்பதைத் தடுப்பது போல கொடிய பாவம் வேறில்லை.

இவ்வுலகில் நாம் தேடிய பொருள் உடன் வராது ஆனால், அப்படித்தேடிய பொருளைக் கொண்டு நல்ல அறங்கள் செய்தால், அஃது அருளாக மாறி இம்மையில் நலத்தையும் (முத்தியையும்) அளிக்கும் எனவே தான், அருணகிரிநாதர் 'எங்காயினும் வரும் ஏற்பவர்க்கிட்டது' என்றும் 'காசு தேடி ஈயாமல் வாழப் பெறுவோரும் மாறிலாத் மாகாலனூர் புக்கலைவாரே' என்றும் கூறினார்.

திருவள்ளுவரும், 'ஈத்துவக்கும் இன்பம்' என்றார்.

அப்பர் சுவாமிகளும்,

"இரப்பவர்க்கு ஈய வைத்தார்
ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாம்
கடுநரகங்கள் வைத்தார்"
என்றார்.

திருமூலர்,

'யாவர்க்கு மாம்இறை வர்க்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்குஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதுஒரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க்கு இன்னுரை தானே' என்றார்.

மேலும் திருமந்திரம் முதல் தந்திரத்தில்,

'வானச் சிறப்பு', 'தானச் சிறப்பு', 'அறஞ் செய்வான் திறம்', 'அறஞ் செய்யான் திறம்', 'அன்புடைமை', 'அன்பு செய்வாரை அறிவன் சிவன்' ஆகிய 6 அதிகாரங்களும் இடம் பெற்றுள்ளன.

அருணகிரிநாதரும் கந்தர் அனுபூதியில்

'கெடுவாய் மனனே கதிகேள் கரவாது
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள்படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே' என்றும்,

'யாமோ தியகல் வியும்எம் அறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனால்
பூமேல் மையல்போய் அறமெய்ப் புணர்வீர்
நாமே நடவீர் நடவீர் இனியே!'
என்றும் கூறியுள்ளார்.

திருவள்ளுவ தேவ நாயனாரும் அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில்:

1. 'சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு'
2. 'அறத்தின்ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்குஇல்லை கேடு'
3. 'அன்றுஅறிவாம் என்னாது அறம் செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை'
4. 'வீழ்நாள் படாஅமை நன்று ஆற்றின் அஃதுஒருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்'
5. 'அறத்தான் வருவதே இன்பம்மற்று எல்லாம்
புறத்த புகழும் இல'
6. 'செயற்பாலது ஒரும் அறனே ஒருவற்கு
உயற்பாலது ஒரும் பழி'

(பழி செய்யாமற் காத்துக் கொள்ளப் படவேண்டியது) என்றெல்லாம் கூறியுள்ளார்.

வான் சிறப்பு அதிகாரத்தில்

1. 'தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம்
வானம் வழங்காது எனின்"

என்றதும் குறிப்பிடத்தக்கது. இக் குறள்பா, தர்மம் அழியாது இறைவன் காக்கின்றானென்ற கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

எனவே, இறையருளை (தயையை - Grace) மூலமாகக் கொண்டு அறஞ் செய்வேண்டும். இதையே திருநாவுக்கரசர் "தயா மூலதன்மம்" எனக் குறிப்பிட்டுள்ளார். தனக்கு இத்தயாமூல தன்மம் இறைவனால் உணர்த்தப் பட்டதைத் திருமழபாடி பதிகத்தில் (6 - 40 - 6) கூறியுள்ளார்.

'சினந் திருத்தும் சிறுப்பெரியார் குண்டர்
தங்கள் செது மதியார் தீவினைக்கே
வீழ்ந்தேன் தேடிப்
புனந் திருத்தும் பொல்லாத பிண்டிபேணும்
பொறியிலியேன் தனைப் பொருளா
ஆண்டு கொண்டு
தனந் திருத்துமவர் திறத்தை யொழியப் பாற்றித்
தயா மூல தன்ம வழி எனக்கு நல்கி
மனந் திருத்தும் மழபாடி வயிரத் தூணே என்றென்
றேநான் அரற்றி நைகின்றேனே.

'குலாங்கெடுத்துக் கோள் நீக்க வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை இடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனை பிற[illegible]வழ்செஞ் சடையி னானைச்
சலங்கெடுத்து தயா மூலதன்மம் என்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந் தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் [illegible]ம்பியை நள்ளாற் றானை
நான் அடியேன் நினைக்கப்பெற் (று) உய்ந்த வாறே'

என்று தயாமூலதன்மத்தின் முக்கியத்தைக் கூறியுள்ளார் சொல்வேந்தர்.

தர்மத்திற்குத் தயையே (இறையருளே) மூலமாகும் என்பது சிவதருமோத்திரத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

'ஆதரவே பரமான அறம தாகும்
ஆதிநடு அந்தம் இவற் (று) அனைத்தும் மாகும்
ஆதரவு அற்றவர் ஈக அறமே ஆகாது (து)
ஆதலினால் ஆதரவே மூல மாகும்

ஆதரவே பிரகிருதி ஆன்மா ஈசன்
என்னும் பொருளும் அறிவிக்கும்
அமலன்தாளும்
ஆதரவே அடைவிக்கும் ஆதலாலே
அனைத்தினுக்கும் ஆதரவே
மூலமாமே'.

புத்த சமண தர்மம் தயையை (Grace) மூலமாகக் கொண்ட தன்ம மல்ல. அருணந்தி சிவாசாரியர் சிவஞானசித்தியார் சுபக்கத்தில்:

'அரன் அடிக்கு அன்பர் செய்யும்
பாவமும் அறமதாகும்
பரன் அடிக்கு அன்பிலாதார்
புண்ணியம் பாவமாகும்
வரமுடைத் தக்கன் செய்த
மாவேள்வி தீமையாகி
நரரினில் பாலன் செய்த பாதகம்
நன்மை ஆய்த்தே'.

எனப் பாவம் அறமாவதும் அறம் பாவமாவதும் இறையன்போடு செய்யப்படுவதைப் பொறுத்திருப் பதை வலியுறுத்திக் கூறியுள்ளார். (நரரினில் பாலன் என்றது சண் டீஸ்வர நாயனாரை - " பாதகத் துக்குப் பரிசுவைத்தானுக்குப் பல் லாண்டு கூறுதுமே" எனச் சேந்தனார்

சிபிச் சக்ரவர்த்தி தனது மடி யில் வந்து வீழ்ந்து அடைக்கலம் புகுந்த புறாவைக் காப்பாற்றி, அதைத் தொடர்ந்து வந்த வைரிக் குத்தன் தொடையிலிருந்து சதையை அறுத்து வீசி உண வளித்து ஆதரித்துத் தர்மநெறி யில் வழுவாதிருந்ததை நினைவு கொள்வோமாக.

பிறவிக் குருடரான நாட்ட மிகு தண்டியடிகள் நாயனாரின் திருக் குளப் பணியாகிய அறச்செயல்: இளையான்குடிமாற நாயனாரின் வறுமையிலும் நள்ளிரவில் அடி யார்க்கு அமுது செய்த அறஞ் செயல் இயற்பகை நாயனாரின் மனைவியையும் அடியார்க்குத் தானம் செய்த அறச்செயல்: அமர் நீதி நாயனாரின் செல்வம் முழு வதையும், மனைவி மகன், தன் னையும் அறம் செய்தது: கண் ணப்பநாயனார் ஒரு கண்ணைத் தானம் செய்ததோடு மற்றொரு கண்ணையும் அளிக்கத் துணிந்த அன்பு மிகுந்த அறச் செயல்: சிறுத்தொண்டர் நாயனார் தமது ஒரே புதல்வனை வெட்டிக் கறி சமைத்து அடியார்க்கு அமுது செய்தது முதலியவற்றை நினை விற் கொள்வோமாக'

"Charity begins at home" எனத் தொன்று தொட்டு நிலவி வரும் பழமொழியைப் பலரும் "தனக்குக் கண்டு தானமும் தர்மமும்" எனக்கருதுகின்றனர்.

இப்பழமொழியின் உண்மையான கருத்து இல்வாழ்க்கையை அறத்துடன் தொடங்க வேண்டும் என்பதேயாகும். இதனாலன்றோ மனையாள் 'சகதர்மினி' எனப்படுகிறாள்.

**தர்மம் தலை காக்கும் என்பது**

தர்மம் அழியாத தலைவனாகிய இறைவனால் காப்பாற்றப் படுகிறதென்பதையும், மேலும் தர்மம் உயிருக்கு உறுதி பயக்கின்றது என்பதையுமே உணர்த்துகின்றது. அறக்கடவுள் சிவபெருமானிடம் தன்மை இடப ஊர்தியாக (வாகனமாக) ஏற்றுக் கொண்டு, உலகினில் அறம் என்றும் அழியாது நிலைத்திருக்குமாறு அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்தித்து வரம் பெற்றதையும் நினைவு கொள்வோமாக.

இதன் தொடர்பாகத் திருமூலர் திருமந்திரத்தில்,

'ஐந்தின் பெருமையே அகலிடமாவதும்
ஐந்தின் பெருமையே ஆலயமாவதும்
ஐந்தி பெருமையே அறவோர் வழக்கமும்
ஐந்தின் வகைசெய்யப் பாலனுமாமே'

என்று கூறியுள்ளார். இங்கே 'பாலனுமாமே' என்றது இறைவன் என்றும் இளமையோடு கூடிய வலிமையுடன் காப்பாற்றுவதையே குறித்தது.

திருவையாற்றில் அம்பாள் 32 அறங்களைச் செய்து அறம் வளர்த்த நாயகி (தர்மசம்வர்த்தினி) யாக விளங்குவது குறிப்பிடத் தக்கது. 32 அறங்களாவன: ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்கு உணவு, அறுசமயத்தோர்க்கு உண்டி, பசுவிற்கு வாயுறை, சிறைச்சோறு, ஐயம் தின்பண்டம் நல்கல், அறவைச் சோறு, மகப் பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப் பிணஞ்சுடல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய் மருந்து, வண்ணார், நாவிதர் கண்ணாடி, காசோலை, கண் மருந்து, தலைக்கெண்ணெய், பெண் போகம், துயர் காத்தல், தண்ணீர்ப் பந்தல், மடம், தடம், கா, ஆவுறுஞ்சுதரி, விலங்கிற்கு உணவு, ஏறு விடுத்தல், விலை கொடுத்து உயிர் காத்தல், கன்னிகா தானம் ஆகியவை.

கிருஷ்ண பரமாத்மா கர்ணனிடம் ஒரு வயோதிகப் பிராமணரைப் போலச் சென்று, கர்ணன் செய்த தர்மத்தின் பலனைத்

தாரை வார்த்து வாங்கியதாகச் சொல்லப்படும் மகாபாரதக் கதையின் உண்மையான கருத்தைச் சைவ சித்தாந்த அடிப்படையில் உணர முடிகின்றது. பசு புண்ணியமும் மீண்டும் பிறவிக்கு வித்தாகு மாகையால், கைவிடப்பட வேண்டும் என்பதும், அதற்கு மேலாக ஒருவர் செய்த புண்ணியப் பயனையும் மற்றொருவர்க்குத் தத்தம் செய்வதும் நியதி தத்துவத்திற்கு முரணாகாது என்பதும், சைவசித்தாந்தம்.

நளச்சக்ரவர்த்தி கார்க்கோடகன் என்ற பாம்பைக் காட்டுத் தீயிலிருந்து காப்பாற்றிய தருணத்தில் அந்தப் பாம்பு அவரைத் தீண்டியதும், அவர் அவ்வாறு தீண்டியது துரோகம் அன்றோ எனப் பாம்மை வினவ, அந்தப் பாம்பு அவருக்குப் போர்வையைக் கொடுத்து அதன் பயனாகப் பின்னர் ஏற்பட்ட நன்மையையும் கருதி, தர்மம் தலை காதத்ததை உணர்வோமாக.

யுத்த தர்மத்தைப் பற்றியும் ஈண்டுச் சிந்திப்போமாக. நிராயுத பாணியுடன் போர் புரிவது யுத்த தர்மத்திற்கு மாறாகும். குமரகுருபர சுவாமிகள் முத்துக்குமார சுவாமிபிள்ளைத் தமிழில் இதைப் பற்றிக் சூரபன்மனுடன் போருக்குச் செல்வதற்கு முன் வீரவாகு தேவரை மஹேந்திரபுரிக்குத் தூது அனுப்பியது, போர் நடைபெற்ற போதும் முதல் நாள் போரில் சூரபன்மன் நிராயுத பாணியான போது, யுத்தம் நிறுத்தப்பட்டு, மறுநாள் யுத்தம் தொடர்ந்து நடைபெற்றதை நினைவிற் கொள்வோமாக.

இராமபிரான் இராவணனை 'இன்று போய் நாளை வா' என்றுரைத்த அற ஒழுக்கத்தையும் நினைவு கொள்வோமாக.

வாலிவத்தில் நடைபெற்ற தர்க்கத்தையும், தர்மம் தலை காக்கப்பட்டதையும் அஃதாவது தர்மம் அழியாது இறைவனால் காப்பாற்றப்பட்டதையும் நினைவு கொள்வோமாக.

திருச்சிற்றம்பலம்

**நன்றி**

**சைவ சித்தாந்தக் கட்டுரைகள்**

**மலேசியா அருள் நெறித்திருக்கூட்டம்**

அன்பளிப்பு 30/=

சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்
ஏழாலை மேற்கு , சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.